விலை சதம் 5

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone 3411

நாமார்க்கும் குடியல்லோம்

பதிகம் 1 | கொழும்பு, சாவலித்த வரு ஐப்பசி 11உ செவ்வாய்க்கிழமை | Colombo, October, 28. 1947 — ஹிஜிரி 1366 துல் ஹஜ் பிறை 13 | இதழ் 147

ஸ்ரீநகருக்கு இந்தியத் துருப்புகள் பாய்ச்சல்

அரசாங்க வருவாயில் பாதி அரசாங்க ஊழியர் சம்பளம்

மக்கள் வாழ்க்கைச் செலவில் மிதமிஞ்சிய உயர்வு

1947 48வது வருடவரவுசெலவு திட்டம் தயாராகிறது

வாழ்க்கைச் செலவு குறைய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

கொழும்பு, அக் 27

1947-48வது வருட வரவு செலவுத் திட்டம் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இத்திட்டத்தில் இரு முக்கியமான அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை. மக்கள் வாழ்க்கைச் செலவு நிலையை மிதமிஞ்சி அதிகரித்தவிட்டதால் அதைக் குறைப்பதற்கான மார்க்கங்களைக்கண்டுபிடிக்கப் பாரிகள் முயற்சிக்கிறார்கள். இரண்டாவதாக சர்க்கார் வருமானத்தில் பாதிக்குமேல் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சம்பளத்திற்காக செலவாகிறது. அதைக் குறைக்கவும் வழி கண்டு பிடிக்கப்படும்.

யுத்தத்திற்கு முன் இலங்கையில் மக்கள் வாழ்க்கைச் செலவின் புள்ளி விவர நிலை 100ஆக இருந்தது. 1947 அகஸ்ட் மாதத்திலோ இது 253 ஆக ஏறிவிட்டது. அரசாங்கம் மக்களை வாழ்க்கைச் செலவைக் குறைக்கக்போதிய நடவடிக்கையெடுத்தால் அன்றி இது துரிதமாகக் குறையாது என்று பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள்.

அமெரிக்காவில் 36 பாயின்டு, மேலும் பிரிட்டனில 33 பாயின்டுகளுக்கு மேலும் வாழ்க்கைச்செலவு புள்ளி விவர நிலை ஏறியதில்லை. ஆனால் இலங்கையிலோ 153 பாயின்டுகள் ஏறிவிட்டன. இது சம்பந்தப்பட்ட நிர்வாகப் பொறுப்புள்ள மந்திரிகள் தொழில மந்திரியும் உணவு மந்திரியுமாவர். இவர்கள் நிதி மந்திரியைக் கலந்து ஆலோசித்து மக்கள் வாழ்க்கைச் செலவு ஏறியிருப்பதைக் குறைக்க திட்டங்கள் வகுப்பார்கள். செலவு குறைப்வேண்டுமானால், அரிசி, கோதுமை மாவு, சீனி, உடுபுடவை இவைகளின் விலை குறைப்வேண்டும். இதற்கு அரசாங்கம் சில முக்கிய சாமான்களை விலை குறைத்து விற்க பண ஈடு செய்யவேண்டும் இந்த பணம் அரசாங்க வருவாயிலிருந்து கொடுக்கவேண்டியிருப்பதால் அதைச் சரிக்கட்ட முக்கியமிலாத பொருட்களில் விலையை ஏற்றிவிடவேண்டும்.

இப்பொழுது அரசாங்கம் அரிசிக்கும் ரப்பருக்குமாக விலை வாசிகளைச் சரிக்கட்ட வருடத்திற்கு 10 கோடி ரூபாய் பண ஈடு செய்துவருகிறது.

அரிசிக்கு வழங்கப்படும்பண ஈடைக் குறைக்க முடியாது ஆனால் ரப்பர் விலையில் ஏற்றமேற்பட்டிருப்பதால் அதற்குக் கொடுக்கப்படும் பண ஈடைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டு வரலாம்.

நவம்பரில் பாராளுமன்றம் கூடும்போது அதில் சமர்பிக்கும் பொருட்டு 1947-48வது வருடவரவுசெலவுத் திட்டத்தை பொருளியல் காரியாலயத்தார் இப்பொழுது தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இது சமர்ப்பிக்கப்படும்போது நிதிமந்திரி அரசாங்கம் உதவும் பணஈடு சம்பந்தமாகவும் அரசாங்க உத்தியோகஸ்தர் சம்பளத்தைக் குறைக்கும் பிரஸ்தாபிப்பார்.

அரசாங்க வருமானத்தில்பாதி அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளமாக செலவாகிறது இது நாட்டின் சொத்த தேச வருமானத்தில் ஆறில் ஒரு பங்காகும். அரசாங்க ஊழியர்கள் உதவி பெறும் ஆசிரியர்கள் உட்பட ஒரு லட்சத்து இருபதினாயிரம் பேர்களிருக்கிறார்கள்.

சம்பள உயர்வுக்கு முன் அரசாங்க ஊழியர்களுக்கு மொத்தம் 171,650,000ரூபாய்சம்பளம் கொடுக்கப்பட்டது சம்பள உயர்வுக்குப்பின் 51,400,000 ரூபாய் அதிகரித்ததால் சென்ற நிதி வருடம் மொத்தம் 223,050,000 ரூபாய் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

லொறி மோதி சிறுமி மரணம்

கொழும்பு, அக் 28

நிதம்புலா போலீஸ் பகுதியில் ரதவான என்னுமிடத்தில் கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த லொறியொன்று 29-30வது மைல் போஸ்டுக்கு அடையே எம் பி சோமாவதி (வயது 12) என்னுஞ் சிறுமியை மோதியதனால் அச்சிறுமி மரணமடைந்துவிட்டாளென்றும், டிரைவர் போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணை நடப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

முதலையினால் தாக்கப்பட்டவர் காப்பாற்றப்பட்டார்

ஜா-எலை, அக் 28

பமுனுகமா பகுதியில் ஹமிலடன் காலவாயில மீன் பிடிக்கும்பொழுது மிகப் பெரிய முதலை யொன்றினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் வாலியானு என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் அவரிடம் இருந்தவர்கள் இவரைக் காப்பாற்றியதாகக் கூறப்படுகிறது.

பட்டதாரிகளின் அதிர்ஷ்டம்

ஆசிரியர்களுக்குப் புதிய சட்டம்

கொழும்பு, அக் 27

ஆசிரியர்கள் விசேஷ ஸ்தானங்களைப் பெறுவது சம்பந்தமாக இப்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட கல்விச் சட்டத்தின்படி பட்டதாரிகள் மாத்திரம் "ஏ" வகுப்புப் பள்ளிக்கூடங்களில் முதலாவது பிரிவுக்கு உயர்த்தப்படுவராம்.

இதுவரைக்கும் பயிற்சிபெற்ற ஆசிரியர்களும், பயிற்சி பெறாத ஆசிரியர்களும், விசேஷ வேலை செய்ததால் முதலாவது பிரிவிற்கு உயர்த்தப்பட்டிருந்தனர்.

புதிய சட்டத்தின்படி இரண்டாவது பிரிவிற்கு மேற்பட்டவர்கள் உயர்த்தப்படமாட்டார்கள்.

தொழிலாளர்-விவசாயிகள் முன்னணிக் கூட்டம்

கொழும்பு, அக் 28

டாக்டர் எஸ் ஏ. விக்கிரமசிங்கா தலைமையில் உடுகமை தொழிலாளர்-விவசாயிகள முன்னணிக் கூட்டமொன்று நடைபெற்றது உடுகமையின் அங்கத்தவர் (பாராளுமன்ற) திரு டி. எஸ் குணசேரா பேசுகையில் உடுகமையிலுள்ள தொழிலாளர்-விவசாயிகள் சங்கத்தைப் போன்று அரசியல் கலப்பற்ற சங்கங்கள் தங்கள் குறைகளை தமக்குத் தெரிவிப்பின் பாராளுமன்றத்தில் அவற்றைத் தெரிவித்துத் தாம் நடவடிக்கை எடுக்க முடியுமென்று கூறினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களில் வெள்ள அகதிகளுக்கு அகதாமையிலுள்ள எஸ்டேட்டுகளில் உயர்ந்த இடங்களை வாங்கக் கொடுக்க வேண்டுமென்றும் புதிய ரஸ்தாக்கள் அமைக்க வேண்டுமென்றும கூறப்பட்ட தீர்மானமும் ஒன்றாகும். இக்கூட்டத்தில பலர் பேசினர்.

தற்காலிக குமாஸதாக்கள் வேலை நீக்கம்

நிறுத்திவைக்கும்படி போ. லெ. கட்சி வேண்டுகோள்

கொழும்பு. அக். 28

சர்க்கார் சேவையிலிருந்து தற்காலிகமான உத்தியோகஸ்தர்களை வேலையை விட்டு விலக்குவது சம்பந்தமான அறிக்கைகளை போலிஷிவிக் லெனினிஸ்ட் கட்சி லமாகக் கண்டித்துள்ளதுடன் இவ்விஷயத்தைப்பற்றி பாராளுமன்றத்தில் வவாதத்திற்கெடுத்து முடிவு செய்யப்படும் வரை நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படி சர்க்காரை கேட்டுள்ளது.

தேயிலை தொழிற்சாலை தீக்கிரையானது

கந்தப்பளை, அக். 27

கந்தப்பளை கொன்கோடியா எஸ்டேட்டிலுள்ள தேயிலைத் தொழிற்சாலை சனிக்கிழமை பின்னிரவில் எரிந்துவிட்டது நெருப்பு பிடித்த காரணம் அறியப்படவில்லை.

பிரிட்டனில் பாசிஸ்ட் பிரசாரம் தலைதூக்குமா?

மோஸ்லீ ஆதரவாளர் கூறுவது

லண்டன், அக். 26

பிரிட்டனில் உள்ள பாஸிஸ்ட் சங்கத்தின் பழைய தலைவரான ஸர் ஓஸ்வால்ட் மோஸ்லி லண்டனில் பிரசாரக் கூட்டங்கள் நடத்தவார் என்று தெரிகிறது. இவ்விஷயம் ஸர் மோஸ்லியின் அனுகாபிகள் அடங்கிய மாஜி ராணுவ சங்கத்தின் கொள்கை வழிகாட்டியான ஜெப்ரீ ஹாமால் கூறப்பட்டது.

இது சம்பந்தமாக ஸர் மோஸ்லியை டெலிபோன் மூலம் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்தார் விசாரித்ததபோது "அவருக்கு இது சம்பந்தமாக ஒன்றும் தெரியாது" என்று கூறிவிட்டார். "அரசியலில் நீங்கள் மீண்டும் பிரவேசிப்பீர்களா?" என்று கேட்கப்பட்டபோது "நான் ஒரு பிரசுரகர்த்தன்; எனது "சமப் கொலைப் புஸ்தகமான" "ஆல்டனேர்டிவ்" வில் நான் கூறிய கருத்துக்களை நாட்டில் பரவச் செய்யவழி உண்டானால் அதற்கு முயற்சிபேன் நெருக்கடி காலத்தில் எனது நாடான இங்கிலாந்துக்கு தேவையானது எதுவாயினும் அதனை நான் செய்யமுன் வருவேன் என்று குறிப்பிட்டார். (ராய்ட்டர்)

காரினால் மோதுண்ட சிறுவன் மரணம்

கொழும்பு, அக். 28

காலி ரஸதாவில் சஹலா சந்தியில் திரு. சாலமான என்பவரின் காரினால் சனிக்கிழமை காலை தடி வீழ்ந்ததப்பட்ட ஆர். குணதாஸா (அம்லாங்கொடை) என்னும் சிறுவன் பலபிட்டி ஆஸ்பத்திரியில் மரணமானான்.

"பறக்கும் தட்டு" புரளி

சோவியத்துக்கு விரோதமான பிரசாரம்

லேக்ஸக்ஸஸ், அக். 27

அச்சரியகரமான பறக்கும் தட்டுகள் அமெரிக்காவிலும் மற்றும் வெளியிடங்களிலும் ஆகாயத்தில் பறந்தன என்று சிறிது காலத்துக்கு முன் தெரிவிக்கப்பட்டிருந்ததைப் பற்றி ஐக்கிய தேச சமூகக் கமிட்டியில் ரஷியப் பிரதிநிதி குறிப்பிட்டார். இந்த ஆதாரமற்ற விஷயங்களை சோவியத் யூனியனுக்கு எதிராக பிரசாரம் நடத்துதற்கு உபயோகிப்பதாக அவர் கண்டித்தார்.

(ராய்ட்டர்)

மாஜிஸடிரேட்டுக்கு திடீரென சுகயீனம்

யாழ்ப்பாணம். அக். 27

மல்லாகம் கோர்ட் மாஜிஸடிரேட் திரு, ஏ. வி. இளட். விஜயரத்தினா காலை விசாரணை முடிந்து தமது மத்தியான போஜனத்துக்கு தமது அறைக்குச் சென்றவிட்டது திடீரென சுகயீன மடைந்தார் இவருக்கு டாக்டர் ஏ. டி. எம். எச் சார்ட்டும் டாக்டர் எஸ். ராமநாதனும் வைத்திய உதவி அளித்தனர் பின்னர் இவர் தமது இருப்பிடத்துக்கு அனுப்பப்பட்டார்.

இரவில் கார் திருடப்பட்டது

கொழும்பு, அக் 28

வெள்ளவத்தை கொலிங்வூட் பிளேஸைச் சேர்ந்த திரு. டி. பி. எஸ், விஜயரத்னாவிற்குச் சொந்தமான ஒரு சலூன் கார் சனிக்கிழமை இரவு திருடப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது

நிரந்தரமாக இலங்கையில் குடியேறுக!

இலங்கைவாழ் இந்தியர் கடமை

இலங்கை இந்தியன் காங்கிரஸ் தலைவர் வேண்டுகோள்

திம்புலா, அக். 25

திம்புலாவில் நடைபெற்ற இந்திய தோட்டத் தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் பாராளுமன்ற அங்கத்தினர் திரு எஸ். தொண்டமான் பேசியபோது, இலங்கைவாழ் இந்தியர்கள் இந்திய பிரஜாஉரிமை கொண்டாடுவதை விடுவிட வேண்டுமென்று இங்கு சொந்த நலன்களையுடைய இந்தியர் அனைவரும் இலங்கையைத் தாயகமாகக் கொண்டு இலங்கையிலேயே இலங்கையர்களாக நிரந்தரமாக குடியேறிவிடவேண்டுமென்றும் கூறினார். இக்கூட்டத்திற்கு பாராளுமன்ற அங்கத்தினர்களான திரு. கே. ராஜலிங்கம், திரு சி. வி. வேலுப்பிள்ளை, திரு கே. குமாரவேலு ஆகியோர் விஜயம் செய்திருந்தனர். திரு தொண்டமான் பேசியபோது மேலும் கூறியதாவது:-

இலங்கையில் பற்றில்லாத இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவிடுவதே நலம். தொழிலாளர்கள் குடிப்பழக்கத்தைகை விடவேண்டும். பரிசுத்த வாழ்க்கைக்கும் சேவா உணர்ச்சிக்கும் மகாத்மா காந்தி காட்டிய வழிகளைப் பின்பற்றுவதால் மிகவும் பயன் ஏற்படும். அவரது அஹிம்சா கொள்கை புத்தபகவான் கொள்கையேயாகும். அதனால் பௌத்த நாடான இலங்கையில் கார்தீபம் சுலபமாகப் பரவும். மக்கள் தீரமாக இருக்க வேண்டும். காந்தியின் அஹிம்சா தர்மமென்றால் கோழைத்தனமல்ல. மிக்க பொறுமையுடனும் தீரமுடனும் ஒவ்வொருவரும் தத்தம் உரிமைகளை அடைய நடத்தும் சாத்வீக போராமாகும்.

முப்பதாவது மைலில் மலைஜாதியார் முன்னேற்றம்

ஆக்கிரமிப்பைத் தடுக்க காஷ்மீர், ரஷியாவின் உதவியை நாடும்!

பாரசீகத்தின் இந்திய ஸ்தானிகருக்கு பம்பாயில் வரவேற்பு

இந்திய முஸ்லிம்கள் கடமைபற்றி முஸ்லிம் தலைவர்கள் முழக்கம்

புதுடில்லி, அக். 27

இன்று அதிகாலையிலிருந்து இந்தியாவின் 20-வது ராணுவ விமானப் படையைச் சேர்ந்த விமானங்களில் சீக்கியத்துருப்புகள் டில்லியிலிருந்து காஷ்மீருக்குப் பறந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஏற்கனவே ஸ்ரீநகருக்குப் போயிருக்கும் படையைச் சேர்ந்த மீதமுள்ள துருப்புகளை புறப்பட்டுச் செல்கின்றன. ஆயுதங்களையும் துருப்புகளையும் ஏற்றிக்கொண்டு இரண்டிரண்டு அல்லது மும்மூன்று லொறிகளாக டில்லியிலுள்ள பாலம் விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்தன. 10 மைல் தூரத்திலுள்ள வெல்லிங்டன் விமான நிலையத்திலிருந்து விமானங்கள் வெடிமருந்துகளை ஏற்றிச் செல்கின்றன

காஷ்மீரிலுள்ள ஏதாவது ஒரு விமான நிலையம் கைப்பற்றப்படுமானால் விமானத்திலிருந்து குண்டுகளைப் பொழிய 50 பாரஷூட் துருப்புகள் தயாராக இருப்பதாக ஒரு சீக்கிய ராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இந்திய சர்க்கார் மேலிடத்து தீர்க்காலோசனையின் மீது இவ்வித நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். காஷ்மீரம் பயமுறுத்தப்படுவதைத் தடுக்க இந்திய சர்க்கார் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு தயாராக இருக்கிறார்கள் காஷ்மீரில் எல்லைப்புற மலை ஜாதியினர் ஸ்ரீநகரிலிருந்து 30 மைல் தூரத்திற்கு முன்னேறி வந்துவிட்டார்கள். காஷ்மீர் பிரதேசத்தில் விபாழக்கு முமையனறு பிரவேசித்தமலை ஜாதியார் அபோத்தாபாத-ஸ்ரீநகர் ரஸ்தா வழியாக முன்னேறி வந்தனர். நிலைமை அபாயகரமானதாக இருக்கிறதென்று அதிகாரிகள் கருதுகிறார்கள். 48 மணி நேரத்தில் இது சம்பந்தமாக முக்கியமான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

அவசியமாயின் ரஷியாவும் உதவிக்கு வரும்

புதுடில்லி, அக். 26

இந்திய யூனியன் சர்க்காரின் பாதுகாப்பு கமிட்டியும் பிறகு இந்திய யூனியன் மந்திரி சபையும் இன்று கூடி பாகிஸ்தான் ராணுவத்தைச்சேர்ந்த அபிரிடி மலை ஜாதி சோல்ஜர்களின் படையெதிர்ப்பை எதிர்த்து காஷ்மீர் சர்க்காருக்கு உதவ அளிக்க முடிவு செய்ததனவென்று நமபகமாக அறிய படுகிறது. அபிரிடி சோல்ஜர்களின் நவீன ஆயுத சாதனங்களுடன் 500 லாரிகளில் காஷ்மீர் சமஸ்தானத்துக்குள் பிரவேசித்தனர்.

இந்திய சர்க்கார் தூதர் புறப்பட்டார்

இந்திய சர்க்கார் சமஸ்தான இலாகா காரியதரிசி ஸ்ரீ வி. பி. மேனன் விமானத்தில் காஷ்மீருக்கு ஏற்கனவேயே புறப்பட்டார்.

மலை ஜாதியாரின் படையெடுப்பை தடுத்து முறியடிக்க காஷ்மீர்; இந்திய சர்க்காரின் உதவியுடன் மட்டுமன்றி அவசியமானால் சோவியத் சர்க்காரின் உதவியையும் தேடலாமென்று சில வட்டாரங்கள கருதுகின்றன.

பாரசீக இந்தியருக்கு விரோதமாக லீகர்கள் பிரசாரம்

பம்பாய், அக் 26

முஸ்லிம் லீகர்கள் பாரசீகத்திலுள்ள இந்தியர்களுக்கு விரோதமாக அங்குள்ள ஜனங்களைத் தூண்டிவிடப் பிரசாரம் செய்துவருவதாக இங்கு செய்தி எட்டியிருக்கிறது. பாரசீகத்தில 3000 இந்தியர்களிருக்கிறார்கள். இதுவரை அவர்களிடம் பாரசீக மக்கள் அந்நியோன்யமாக இருந்தார்கள். ஆனால் லீகர்கள் அங்கு சென்று கிழக்குப் பஞ்சாப்பில் முஸ்லிம்களை ஹிந்து-சீக்கியர் படுகொலை செய்கிறார்கள் என்று பிரசாரம் செய்து துவேஷத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இதனால் பாக்கிஸ்தான் எல்லையிலுள்ள பாரசீக பிரதேசமான ஜெய்தானில் தொல்லைகள் ஏற்படும்போலிருக்கிறது. அவ்விதமேற்பட்டால் பம்பாய் பக்கங்களில் குடியேறியிருக்கும் 60,000 பாரசீகர்களின் நிலைமை பாதிக்கப்படும். இரு நாடுகளுக்குமிடையே இவ்வித நிலைமை ஏற்படாதவாறு பாரசீக சர்க்கார் கிளர்ச்சி செய்யும். முஸ்லிம் லீகர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

பாரசீகத்திற்கு இந்தியா ஸ்தானிகர்

பம்பாய், அக். 26

நேற்று மாலை பம்பாய் பாரசீகர் சங்கத்தார் பாரசீகத்தில் இந்திய சர்க்காரின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள சையது அலி ஜாஹிருக்கு ஒரு வரவேற்பளித்தார்கள். அப்பொழுது அவர் பேசியபோது பின் வருமாறு கூறிப்பிட்டார்:- பாரசீக நிலைமை இப்பொழுது மிக்க சங்கடமானதாகும். மிக சாதுர்யமாக அங்கு வேலைகள் செய்ய வேண்டியதிருக்கிறது. பம்பாயிலுள்ள பாரசீகர்களும் பாரசீகளுமே எனக்குச் செய்யும்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வதிந்து ஷு ஐப்பசி மீ 11உ
செவ்வாய்க்கிழமை

சிங்களக் கொடியும் மந்திரி சபையும்

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தை "உலகத்து சட்டசபைகளின் தாய்" என்று அழைக்கிறார்கள். அதன் அரசியல் முறை யாவருக்கும் வழிகாட்டியாய் இருப்பதால்தான் இப்பெயர் ஏற்பட்டதாகும். எங்கள் புதிய சோல்பரித் திட்டமும் பல அம்சங்களில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தையே ஒத்ததாகக் காணப்படுகின்றது. ஆகவே நாம் பிரிட்டிஷாரின் நல்ல அரசியல் அம்சங்களைக் கையாளவேண்டிய பொறுப்பு புகுத்தப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் மந்திரி சபையினர் ஒருமித்தும், தனித்தும் தங்கள் செயல்களுக்கும், பேச்சுக்களுக்கும் பொறுப்பானவர்களாவர். ஒரு மந்திரி, நாட்டின் க்ஷேமத்தையிட்டு ஒரு கருமத்தைச் செய்தால், மற்ற மந்திரிகளின் சம்மதத்தின்பேரிலேயே அவ்வாறு செய்வர். அவ்வாறே ஒரு அரசியல் பிரச்னையையிட்டு ஒரு மந்திரி தம் கொள்கையை விளக்கினால், அதையே மற்ற மந்திரிகளின் அபிப்பிராயமாக பிரிட்டிஷ் மக்கள் எடுத்துக் கொள்வர். இது இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக அங்கு நடைபெற்று வருவது கண்கூடு. மந்திரி சபையினருள் வேற்றுமையான அபிப்பிராயம் இருக்கப்படாதென்பதே இதன் அடிப்படையான நோக்கம்.

திரு. டி. எஸ். சேனநாயக்கரும், தம்முடன் ஒற்றுமையான அபிப்பிராயங்கொண்டு, ஒத்துழைக்கக்கூடியவர்களுக்கே தமது மந்திரி சபையில் இடங்கொடுத்தார். ஒவ்வொரு மந்திரியும் செய்யும் செயலுக்கும் பேச்சுக்கும் முழு மந்திரி சபையும் பாத்திரராவர். இதை எவரும் மறுக்க முடியாது. மந்திரி சபையினர் காரியதரிசிகள் விஷயத்திலும் இந்நியமந்தானே உண்டு மந்திரி சபையின் காரியதரிசிகள் உதவி மந்திரிகளாவர். ஆகவே மந்திரிகளின் அபிப்பிராயத்தையே இவர்கள் கொண்டுள்ளவர்களாவர் என்பது திண்ணம்.

இந்த முறையில் திரு. ஏ. ஈ. குணசிங்கா சென்ற சனிக்கிழமை தேசியக் கொடி விஷயமாகப் பேசியது அத்தனையும் மந்திரிசபையினரின் ஏகோபித்த அபிப்பிராயமென்றே நாம் எண்ணவேண்டியிருக்கிறது. இதன் பொருள், சிங்கக் கொடியல்லாது வேறு கொடியை இலங்கையின் தேசியக் கொடியாகக்கொள்ள மந்திரி சபையினர் இடங்கொடார் என்பதேயாகும். ஒரு நாட்டின் பொறுப்பை ஏற்ற மந்திரிகள் இந்தமாதிரியாகத் தேசியக் கொடி விஷயத்தில் நடக்க முற்படுவது நாட்டின் க்ஷேமத்தின்பாற்பட்டது என்று கூற முடியாது. இந்நாட்டில் இருப்பவர்கள் அத்தனைபேரும் சிங்கள மக்கள் அல்லர். தமிழர், சோனகர் ஆதியோரும் இலங்கையையே ஜன்ம பூமியாகக் கொண்டுள்ளார்கள். இதை மந்திரிசபையினர் புறக்கணிக்க முடியாது.

திரு. குணசிங்காவின் அபிப்பிராயம் மந்திரி சபையினரின் அபிப்பிராயமல்லவென்றால் உடனே அவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட வேண்டும். உண்மையில் சிறுபான்மை மக்களுக்கும் ஒப்பக்கூடிய ஒரு தேசியக் கொடியை அமைக்கும் எண்ணம் மந்திரி சபையினருக்கு இருக்குமாயிருந்தால், தங்கள் அபிப்பிராயத்தை வெளியிடுவதில் தயக்கமிருக்காது இம் மந்திரி சபையில் இரண்டு தமிழ் மந்திரிகளும், ஒரு தமிழ் காரியதரிசியும் இருக்கிறார்கள். இவர்களும் சேர்ந்தா சிங்கக் கொடியை உயர்த்தப் போகிறார்கள்? மந்திரி சபையினர் ஏகோபித்த அபிப்பிராயங்கொண்டிருக்க வேண்டுமல்லவா? இவர்கள் வேறு என்னதான் செய்ய முடியும்? நாய் வேஷம் போட்டால் நன்றாய்க் குரைக்கவேண்டியதுதானே!

ஈராக்கிலிருந்து பிரிட்டிஷ் ராணுவம் காலி

இரு விமானத் தளங்கள் மட்டுமிருக்கும்

கெய்ரோ, அக் 26

இன்றோடு ஈராக்கிலுள்ள பிரிட்டிஷ் ராணுவம் முழுதும் காலி செய்யப்பட்டு விட்டது. பிரிட்டன்-ஈராக் உடன்படிக்கையின்படி ஹாபானியா விலும் ஷைபாவிலுமுள்ள பிரிட்டிஷ் ராணுவ விமானத் தளங்கள் மட்டுமிருக்கும் பிரிட்டிஷ் ராணுவ தூதுக் கோஷ்டியாரும், ராணுவ சம்பந்தமான பண வரவு செலவுகளை முடிக்க சில ராணுவ சிப்பந்திகளும் ஈராக்கில் தங்கியிருப்பர் பிரிட்டன் ஈராக்கில் நிறுவியிருந்த இந்தியத் துருப்புகளையும் காலி செய்து விட்டது.

காலிசெய்வது பிசகு

நியூயார்க், அக். 26

ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்த அமெரிக்க ராணுவ தூதுக் கோஷ்டியார் பிவெருமாறு தெரிவிக்கின்றனர்:- உலகம் நெருக்கடியான நிலைமையிலிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்கா வெளிநாடுகளுள்ள தனது ராணுவத்தைக்குறைப்பது மிகவும் பிசகு.

பிரிட்டன் தனது பொருளாதார நிலைமையை ஸ்திரப்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறது. ஐரோப்பாவில் கமியூனிஸ்ட் ஆதிக்க மேற்படாதிருக்க வேண்டுமானால் பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மன், ஆஸ்திரியா ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா உடனே பொருளாதார மீட்சிக்கு உதவி செய்யவேண்டும். (ராய்ட்டர்)

ஜப்பானிய-ஜெர்மானிய சமாதான உடன்படிக்கை

விரைவில் முடிக்க வற்புறுத்தல்

நியூயார்க், அக். 26

ஐ. நா. சபையில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு ஜெர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகள் சம்பந்தமான முடிவான சமாதான ஒப்பந்தத்தின் பின்னரே குறைவடையும் என்று சீன அயல் நாட்டு மந்திரி டாக்டர் வான் வூசைஸ் இன்று டோக்கியோவில் கூறினார். இவ் ஒப்பந்தங்கள் முடிவடையும் வரை தேசங்களிடையே ஒத்துழைப்புணர்ச்சி தோன்றி வளரவது சாத்தியமில்லை என அவர் தெரிவித்தார். இவ் விரு ஒப்பந்தங்களில் ஜப்பானிய உடன்படிக்கையே இலகுவில் ஏற்படுத்தக் கூடியது எனவும் ஆகவே ஜெர்மன் ஒப்பந்தத்திற்காக இதையும் ஒத்திப்போட வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். [ராய்ட்டர்]

சாம்ராஜ்ய பாதுகாப்பு தூரகிழக்கு விமான சர்வீஸ்

பாக்கிஸ்தான், இலங்கை, மலேயா தொடர்பு

நார்போக், அக். 27

தூரகிழக்கு ஆஸ்திரேலியா ஆகிய இடங்களுக்கு (சுமார் 13 000 மைல்) தொடர்பு ஏற்படுத்தும் முறைகள்பற்றி ஏற்பாடுகள் செய்துகொள்ள மேற்று மத்திய பாம்பர் ஸ்தாபனத்தின் "லின்கன்" விமானம் புறப்பட்டுள்ளது. இதில் பிரயாணம் தெய்யும் 12 பேரும் இந்த விமான சர்வீஸ் சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வர், கராச்சி, இலங்கை, சிங்கப்பூர், டார்லின், சிடனி கிரைஸ் சர்ச், ஆக்லந்து ஆகியன இவ்விமானம் தங்கும் இடங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. (ராய்ட்டர்)

80 கோடி ரூபாய் செலவில் ராமபாதஸாகர் அணைத் திட்டம்

23 லட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம்

உலகில் பெரிய அமெரிக்க அணைக்கு அடுத்தபடியான பிரமாண்டமான அணை

நந்தீஸ்வர மலையின் இருபுறங்களிலும் கோதாவரி நதி ஜலம் தேக்கப்படும்

சென்னை, அக் 25

ராமபாதஸாகர் அணையைப் பற்றி சென்னை சர்க்கார் பிரதம எஞ்ஜினீயர் பேசுகையில் இதைக் கட்டுவதற்கு ரூ 80 கோடி பிடிக்குமென்றும், ரெவின்யூ வருமானம் இதன் மூலம் ரூ 242 லக்ஷம் கிடைக்குமென்றும் இதைக் கட்டி முடிக்க 12 வருஷங்கள் பிடிக்குமென்றும் கூறினார்.

இதனால் 23 லக்ஷம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிலுள்ள மிகப் பெரியதான போல்டர் அணைக்கு அடுத்தபடியாக இது இருக்குமாம்.

கோதாவரி நதியில் ராமபாதஸாகர் அணை கட்டுவதின் அவசியம் பற்றி சென்னை சர்க்கார் பிரதம எஞ்ஜினீயர் ஸ்ரீ என். கோவிந்தராஜ அய்யங்காரால் நேற்று மாலை சர்க்கார் மாளிகை பாங்க்விடிங் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் விளக்கிக் கூறினார். கூட்டத்திற்கு மேல் சபைத் தலைவர் ஸ்ரீ. ஆர். பி. ராமகிருஷ்ண ராஜு தலைமை வகித்தார்.

மராமத்திலாகா மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் கூட்டத்தினரை வரவேற்றுப் பேசுகையில், அணைக்கட்டின் பூர்வாங்க வேலைகள் பூர்த்தியாய்விட்டதென்றும், சீக்கிரத்தில் வேலை தொடங்கப்படும் என்றும் கூறினார் ஆகவே இது சம்பந்தமாக சட்டசபை அங்கத்தினர்களின் கூட்டமொன்றைக் கூட்டுவது அவசியமென்றும் அதில் அதுசம்பந்தமானவரம்பு அறையும் எஞ்ஜினீயர் விளக்கிக் கூறுவார் என்றும் கூறினார். சீக்கிரத்தில் இதற்காக நாம் சிறு மாநாடு கூட்ட விருப்பதாகக் கூறினார்.

ஸ்ரீ கோவிந்தராஜ அய்யங்கார் கூறியதாவது:— அணைக்கட்டின் உயரம் 400 அடி. அணைக்கட்டு இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு வரும். மத்தியில் ஒரு சிறு குன்று.

அதன் பெயர் மான நந்தீஸ்வரா குன்று. மலையின்மீதுள்ள இரு ஆலயங்கள் அகற்றப்பட்டு அணை கட்டியவுடன் அதன் மீது சிறுவப்படும். அணையின் உட்புறத்திலிருந்தும் வலது புறத்திலிருந்தும் போகும் கால்வாய்கள் மூலம் விசாகப்பட்டினம், கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, குண்டூர் கிருஷ்ணா ஆகிய ஐந்து ஜில்லாக்களில் மொத்தம் 23 லக்ஷம் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். 6 மாதத்திற்கு வரக்கூடிய ஒரு லக்ஷத்திலிருந்து ஒன்றரை லக்ஷம் ஸ்திரமானவர் உற்பத்திசெய்யக் கூடிய மின்சார ஸ்டேஷனும், நதியிலும், கால்வாய்களிலும் கப்பல் போக்குவரத்துக்கு வசதியும் ஏற்படுத்தப்படும்

அணை சென்னை மாகாணத்தில் இருக்கிறது மொத்தம் 527 சதுர மைல் தண்ணீர் பரப்பின் விஸ்தீர்ணம். இதில் 181 சதுர மைல் ஹைதராபாத் சமஸ்தான எல்லையிலும் 316 சதுர மைல் சென்னை மாகாணத்திலும், பாஸ்டர் சமஸ்தானத்தில் 17 சதுர மைலும், ஜெய்பூரில் 14 சதுர மைலும் பரவி இருக்கும் ஒன்றரை கோடி கன அடி ஜலம் தேங்கும். இது அமெரிக்காவிலுள்ள கொலராடோவிலுள்ள போல்டர் அணைக்கு அடுத்தபடியாக இருக்கும் இடதுபுறத்திலுள்ள கால்வாய் விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து கோதாவரிக்கு கப்பல் போக்குவரத்துக்கு உபயோகப்படும் தண்ணீர் தேக்கத்திலிருந்து ஹைதராபாத்துக்கும் மத்தியமாகாணத்துக்கும் கப்பல் போக்குவரத்து நடத்தலாம். வெள்ள காலத்தில் கோதாவரியை இடை வெளியை விரிவாக்கி சுழலினால் இப்பொழுது கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பட்டுவரும் ஆபத்து தவிர்க்கப்படும் இந்த இரண்டு கால்வாயினால் புதிதாக 9 லக்ஷம் ஏக்கர் நெற்பயிர் செய்ய வசதி ஏற்படும். இதில் 4 லக்ஷம் ஏக்கர் இரண்டாம்போகத்துக்குலாயக்காக இருக்கும்.

இந்த அணையைக் கட்டுவதற்கு மொத்தம் 80 கோடி ரூபாய் பிடிக்கும். ரெவின்யூ வருமானம் ரூ. 242 லக்ஷம் எதிர் பார்க்கலாம். இதைக் கட்டி முடிக்க 12 வருஷங்கள் பிடிக்கும்

இது மிகவும் உபயோகரமானதாகும் உணவு உற்பத்தியைப் பெருக்கி கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் கப்பல்போக்குவரத்து வசதியும் மீன் அபிவிருத்தியும் ஏற்படும்.

அங்கத்தினர்களால் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு பிரதம எஞ்ஜினீயர் பதில் கூறிவிட்டு, இந்த தேக்கம் 500 வருஷத்துக்குமேல் இருக்கும் என்று கூறினார்.

அமெரிக்காவில் செயற்கை ரப்பர்

லண்டன், அக் 26

அமெரிக்காவின் செயற்கை ரப்பர் உற்பத்திக்கு சர்க்கார் உதவியளிக்கும் சட்டம் பார்ச்சுமத்துடன் காலாவதியாகிறது. செயற்கை ரப்பரை உபயோகிப்பதற்கு அவர்கள் கடுப்பாட்டை தளர்த்தியிருந்த போதிலும் இன்னும் அவர்கள் செயற்கை ரப்பர் உற்பத்தியிலேயே கவனம்செலுத்தி வருகிறார்கள். அமெரிக்கா உபயோகிக்கும் ரப்பர் இன்னும் முக்கால்வாசி செயற்கை ரப்பராகவே இருக்கிறது ஆரம்பத்தில் உற்பத்தியாளர்கள் தோட்டங்களில் விளையும் செயற்கை ரப்பரில் பிரிட்டனும் ஹாலந்தும் லாபம் பெறுவதால் செயற்கை ரப்பர் மூலம் அமெரிக்கா லாபமடையும் என்று கருதினார்கள். ஆனால் இப்பொழுது செயற்கை ரப்பரே லாபகரமானதென்று கருதுகிறார்கள். (ராய்ட்டர்)

ஐரோப்பாவில் மின்சார சப்ளை தட்டுப்பாடு

பொருளாதாரக் கமிஷன் புதிய திட்டம்

ஜெனிவா, அக். 27

ஐரோப்பாவில் உணவுப் பொருள்கள், கரி முதலியன பற்றினால் பெரிய தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன இப்பொழுது மின்சார சப்ளையிலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய பொருளாதார நெருக்கடிக்கு இடங்கொடுக்க நேருமெனப்பயந்து பொருளாதார கமிஷன் அதனைத் தவிர்ப்பதற்கு ஒரு பெரிய திட்டம் வகுத்து நடவடிக்கை எடுத்துள்ளது. யுத்தம் வராதிருந்திருந்தபின் ஐரோப்பாவில் 1939-ம் ஆண்டிலும் பார்க்க 40 முதல் 50 சத விகித மின்சார சப்ளை அதிகரித்திருக்கும். ஆனால் இப்பொழுது 5 முதல் 10 சத விகித மின்சாரசப்ளையே அதிகரித்துள்ளது என்று கூறப்படுகிறது. (ராய்ட்டர்)

கைதிகளை நோயாளிகளாகப் பாவியுங்கள்

அதிகாரிகளுக்கு வைத்தியர்களது மனப்பான்மை வேண்டும்

சிறைக்குள்ளிருக்கும் குற்றவாளிகளிடையே மகாத்மா நடத்திய பிரார்த்தனைக் கூட்டம்

புதுடில்லி, அக் 25

கைதிகளிடையே பிரார்த்தனை நடத்துவதில் தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாக மகாத்மா இன்று மதிய சிறையில் பிரார்த்தனை நடத்திய பின் கூறினார். அவர் பேசியதாவது:— நானும் சிறையிலிருந்திருக்கிறேன். தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் சிறைவாசம் செய்ய ஏற்பட்டிருக்கிறது. தென்னாப்பிரிக்காவில் அரசியல் குற்றம் செய்தவர்களும் இதர குற்றம் செய்தவர்களும் விதயாசமின்றி ஒன்றாகவே வைக்கப்பட்டிருந்தனர். இதுவும் ஒரு விதத்தில் நியாயமே தானே. சட்டத்தை எப்படி மீறினால் என்ன? குற்றம் குற்றந்தான் அல்லவா?

சிலர் குற்றங்களை செய்து அகப்பட்டுக் கொள்கிறார்கள். சிலர் அகப்படாமல் தப்பிவிடுகின்றனர் இந்திய சிறைகளின் பிரதம ஜெயிலர் ஒரு சமயம் என்னிடம் கூறியபோது எல்லா கைதிகளையும் விட தானே அதிக குற்றம் பண்ணுவதாக அவர் கூறினார். யார் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம் ஆனால் பெரிய ஜெய்லரான கடவுளை யாரும் ஏமாற்ற முடியாது.

சுதந்திர இந்தியாவில் கைதிகள் எப்படியிருக்க வேண்டும்; சிறைகள் ஆஸ்பத்திரிகள் மாதிரியும் கைதிகள் வியாதியஸ்தர்கள் மாதிரியும் நடத்தப்பட வேண்டும். யாரும் வேண்டுமென்றே குற்றம் செய்வதில்லை. இந்த குற்றம் செய்வதற்கான காரணம் என்ன என்பது கவனிக்கப்பட்டு அதை ஒழிக்க முயற்சி செய்யப்பட வேண்டும்.

சிறைகள் ஆஸ்பத்திரிகள் போல பெரிதாக இருக்கவேண்டும் என்று சொல்லவரவில்லை. தெயில் அதிகாரிகள், ஆஸ்பத்திரி டாக்டர்கள் போல் மனப்பான்மை யுடையவர்களாக மாறவேண்டும். அதிகாரிகள் தன் நண்பர்கள் என்பதை கைதிகள் உணரவேண்டும். சிறை கட்டுப்பாடுகளை கைதிகள் மீறக்கூடாது. கொடுக்கும் காரியங்களை சரிவர செய்து உண்மை பிரஜைகளாக நடந்துகொள்ள வேணடும்.

இங்கு எல்லா வகுப்பு கைதிகளும் இருப்பதாக அறிகிறேன். இங்கு நீங்கள் மனமொத்து வாழ்வது நீங்கள் வெளியில் வரும்பொழுது வகுப்பு வாதம் திரும்தால் அதை ஒழிக்க யிற்சி பெறவதுமாகும். வகுப்புக் கலவரம் இங்கேயும் தலைகாட்ட விடாதீர்கள்.

கிரின் நகரமுற்றுகை

அரசாங்க நிலைமை மோசமாம்

கமியூனிஸ்டுகள் கை ஓங்குகிறது

நாங்கிங், அக். 26

மஞ்சூரியாவில் உள்ள சீன அரசாங்கத்தின் கோட்டையாகிய கிரினைக் கைப்பற்றுவதற்காக சீனக் கமியூனிஸ்ட் படைகள் தீவிரமாகத் தமது தாக்குதலை நடத்திவருகின்றன.

இது தவிர ஜெகோல மாகாணத்தில் உள்ள பீப்பியா நகரைக் கைப்பற்றவும் கமியூனிஸ்டுகள் முயன்று போரிடுகின்றனர்.

ஹாங்கோவுக்குத் தொண்ணூறு மைல் தொலையிலும் கமியூனிஸ்ட்-அரசாங்கப் போர் தீவிரமாக நடைபெறுகிறது.

முன்வந்த ஓர் செய்தியின் பிரகாரம் கமியூனிஸ்ட் படைகள் கிரினை நலா புறமும் வளைந்து நெருங்கிவிட்டதாகவும், அரசியராணுவ நிபுணர்கள் அரசாங்கப் படைகளின் நிலைமை மகா மோசமாகிவிட்டதாகவும் குறிப்பிட்டதாகத் தெரிகிறது [ராய்ட்டர்]

பழய பிரதமர் கம்பி நீட்டினார்

மைக்கலாஜிக் போஎந்தை விட்டு ஓட்டம்

வார்சா, அக் 26

யுத்தகாலப் போலந்தின் பிரதமர் ஸ்டானில்லோ மைக்கலாஜிக் தமது நாட்டைவிட்டு இரகசியமாகக் கம்பி நீட்டிவிட்டார் அவருடன் அவரது விவசாயக் கட்சித் தோழர்கள் மூவர் ஓடிவிட்டார்கள். இச்செய்தி போலந்தின் பிரதமர் ஜோசப் சைரன் கிளைஸிற்கு இன்றிரவு அறிவிக்கப்பட்டது.

பல்கேரிய எதிர்க் கட்சித் தலைவர் தேசத் துரோக நடவடிக்கைகளுக்காக சமீபத்தில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதுபோல அவரும் இவரது பழைய நடவடிக்கைகளுக்காகத் தண்டிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அரசாங்கம் அவர் நாட்டைவிட்டு ஓடிவிடக்கூடுமென்று எண்ணியதாகவும், அவருக்குத் தண்டனை விதித்து தியாகிப் பட்டத்தைப் பெற உதவக் கூடாதென்று தீர்மானித்திருந்ததாகவு தெரிகிறது [ராய்ட்டர்]

கிரேக்க ஜனநாயக சேனை

அரசாங்க மலைத் தளத்தைக் கைப்பற்றியதாம்

ஏதென்ஸ், அக். 26

ஜெனரல் மார்க்கோஸ் தலையில் போராடிவரும் கொரிலாக்களில் "கிரேக்க ஜனநாயகப் பட்டாளம்" தாம் அரசாங்கத்தின் மேல் மாசிடோனியாவில் உள்ள முக்கிய மலைத் தளம் ஒன்றைக் கைப்பற்றி விட்டதாக இன்று தமது ரேடியோ மூலம் தெரிவித்தார்கள். கைப்பற்றப்பட்ட மலைத் தளம் கார்னிஸ வட எல்லையில் உள்ளது இந்த யுத்தத்தின் பயனாக அரசாங்கப் படைகளில் 318 பேர் இறந்ததாகவும் 120 பேர் காயமுற்றதாகவும் 110 பேரைத் தம் சிறைப் பிடித்ததாகவும் கொரில்லாப் படையினரின் ரேடியோ கூறியது. பெருவாரி யுத்த தளவாடங்களும் கைப்பற்றப்பட்டன. [ராய்ட்டர்]

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம்

நவ 15, 16-ம் தேதிகளில் புதுடில்லியில் கூடுகிறது

புதுடில்லி, அக். 26

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் புதுடில்லியில் நவம்பர் 15, 16-ம் தேதிகளில் நடக்கும் என அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியாலயம் அறிவிக்கிறது. கூட்டம் நடக்கும் இடமும் நேரமும் பிறகு தெரிவிக்கப்படும்

நவம்பர் 11-ம் தேதி முதல் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடும்.

மகாத்மாவுடன் நேருஜி. பட்டேல சம்பாஷணை

புதுடில்லி, அக் 26

இந்தியாவிலுள்ள சயாம் ஸ்தானிகர் நேற்று காலை மகாத்மா காந்தியைக் கண்டு பேசினார்.

பிறகு பண்டித நேருவும் சர்தார் பட்டேலும் காந்தியைக் கண்டு பேசிக்கொண்டிருந்தனர்.

இந்திய சர்க்கார் பட்ஜெட்

ஏழரை மாதத்துக்கு பதினேழரை கோடி நஷ்டம்

ரயில்வே பட்ஜெட்டில் 20 கோடி நஷ்டம்

அகதிகளுக்கு மட்டும் 30 கோடி ரூபாய் செலவு

புதுடில்லி, அக் 26

இந்திய சர்க்காரின் இடைக்கால பட்ஜெட்டை ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அடுத்த மாதம் கடும் அரசியலில் ஆஜர் செய்வார் வரவுக்கு மேல் செலவு 25 கோடியாக நேருக்குமென்றும், அகதிகள்செலவுமட்டும் 6 மாத காலத்துக்கு 30 கோடியாகும் என்றும், தினசரி அகதிகளுக்கு 20 லக்ஷம் செலவாகிறதென்றும் சொல்லப்படுகிறது.

பாகிஸ்தான் பிரிவினையால் இந்திய சர்க்காரின் வருமானம் பல வழிகளிலும் குறைந்துபோயிருப்பது பட்ஜெட்டில் துண்டு விழுவதற்கு ஒரு காரணமாகும். மற்றொரு காரணம், அகதிகளுக்காகச் செலவாகும் மாபெருந் தொகையாகும். கிழக்கு பஞ்சாப்புக்கும் இந்திய சர்க்காருக்கும் செலவு பங்கீடு ஏற்படலாகும் ஆகையால் தற்சமயம் அகதிகளுக்காக இந்திய சர்க்கார் 30 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் செய்யவேண்டியிருக்கிறது இந்த பட்ஜெட் ஆகஸ்டு 15-ம் தேதி முதல் 1948 மார்ச் 31ம் தேதிவரையில் உள்ள காலத்துக்குத் தயாரிக்கப்படும்.

இரு புது மந்திரிகள்

கடற்படைக்காகவும், விமானப் படைக்காகவும் இரு புது மந்திரிகள் நியமிக்கப்படுவார்கள் இந்திய பாதுகாப்புப் பிரச்னை சர்க்காரின் முதல் கவனத்தைப் பெறும், இதற்காகவும் ஏராளமான பணம் தேவையாக இருக்கிறது.

ரயில்வே பட்ஜெட்

இவ்வருட ரயில்வே பட்ஜெட்டில் பதினேழரை கோடி ரூபாய் உபரியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பிரிவினை, அகதிகளுக்காக ரயில்கள் ஓடுவது ஆகியவைகளை முன்னிட்டு, இந்திய ரயில்வே வருமானம் பெரிதும் குறைந்துபோகும் என்று அஞ்சவேண்டியிருக்கிறது. அகையால் ஸ்ரீ ஜான் மத்தாயின் ரயில்வே பட்ஜெட்டுக்கு ஏமாற்றமடையச் செய்யும்.

பதினேழரை கோடி லாபம் எதிர்பார்த்த ரயில்வே பட்ஜெட்டில், 20 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று தெரிகிறது.

ஸ்டெர்லிங் சேமிப்பிலிருந்து இந்தியா எடுத்த தொகை

லண்டன், அக். 24

ஸ்டெர்லிங் பிரதேசநாடுகள் 1946 ஜூலை 1உ முதல் 1947 ஆகஸ்ட் 31உ வரை 230 000 000 பவுண் மிச்சிப்படிகளை வாங்கி செலவழித்திருக்கின்றன இதில் இந்தியா மட்டும் 135,000,000 பவுண் வாங்கியிருக்கிறதுஎன்று பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி டால்டன் இன்று காமன்ஸ் சபையில் கூறினார், 230,000,000 பவுணில் ஒரு சில தொகையே டாலராக மாற்றப்பட்டதென்றும் அவர் கூறினார்.

பெட்ரோல் எடுக்கையில் தீப்பிடித்தது

எஸ்டேட் காவற்காரர் மரணம்

நாவலப்பிட்டி, அக். 27

நாவலப்பிட்டியில் டில்டன் எஸ்டேட் கொழிற் சாலையில் இம்மாதம் 22-ம் தேதி இரவு ஹரிக்கன் லாந்தர் வெளிச்சத்தில் பெட்ரோல் ஒரு பீப்பாயிலிருந்து எடுத்த லார்கீன் என்னும் காவற்காரரின் உடையில் தீ பிடித்ததனால் அவர் பலத்த காயங்களை அடைந்தார் நாவலப்பிட்டியில் உள்ள ஆஸ்பத்திரியில் இவர் வெள்ளிக்கிழமை மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய பாதுகாப்புக்கு இலங்கை கேந்திர ஸ்தானம்!

இவ்வேலையைச் செய்து முடிப்பதுதான் யூ. என். பி. களின் முக்கிய நோக்கம்

"டொமினியன்" விளம்பரமும் இதற்காகவே செய்யப்படுகிறது

இம்மாதம் 24-ம் தேதி வெளிவந்த "ஜனசக்தி" என்னும் சிங்களப் பத்திரிகை எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்:

வருகிற வருடம் பெப்ரவரி மாதம் திரு. சேனநாயக்கா பிரதம மந்திரி பதவியிலிருந்து விலகிக்கொள்வார். இப்பொழுது சேனநாயக்கா மந்திரிசபையில் சுகாதார-ஸ்தலஸ்தாபன மந்திரியாய் இருக்கும் திரு. பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாவாரென்றும் தெரிகிறது.

மந்திரிகள் மாற்றம்

இப்பொழுது கல்வி மந்திரியாய் இருக்கும் மேஜர் நுகவெல, சுகாதார ஸ்தலஸ்தாபன மந்திரியாகவும்; தொழில் மந்திரியாய் இருக்கும் திரு. ஜயா கல்வி மந்திரியாகவும்; உதவி தொழில் மந்திரியாய் இருக்கும் திரு. குணசிங்காவுக்கு எதிராக இருக்கும் தேர்தல் ஆட்சேபனையில் தப்புவாரானால் அவர் தொழில் மந்திரியாகவும் நியமிக்கப்படுவதோடு, மறுபடியும் மந்திரிசபை திருத்தியமைக்கப்படும் என்று நம்பக்தகுந்த ஒரு செய்தி யூ என் பி. குகையிலிருந்து வெளிவந்திருக்கிறது.

பிரதம மந்திரியின் எதிர்காலம்

சற்றோதையா மந்திரிப் பதவிகளை பகிர்ந்து கொண்டது சம்பந்தமாக யூ. என் பி யினரிடையே நிலவும் வெறுப்பு வைராக்கியமுமே இந்த மந்திரிசபையின் மாற்றத்திற்கு காரணமாய் இருக்கிறது. அதுடன் சிலர் வருகிற பெப்ரவரி மாதத்தில் நடக்கவிருக்கும் "டொமினியன் அந்தஸ்து" விவாதத்தின்பின், திரு சேனநாயக்கா அரசியலிலிருந்து விலகிக் கொள்வாரென்றும், மற்றும் சிலர் புதிய "டொமினியன் இலங்கையில்" திரு சேனநாயக்கா முதலாவது கவர்னர் ஜெனரல் பதவியை ஏற்பாரென்றும் சொல்லுகிறார்கள்

உண்மையான செய்தி

சரீர சௌக்கியம் காரணமாக திரு. சேனநாயக்கா அரசியல் துறையிலிருந்து விலகிக் கொள்வாரென்று நினைக்கும் பொழுதே "டொமினியன் அந்தஸ்து" கிடைத்தபின் திரு சேனநாயக்காவின் வாழ்க்கையிலே முயற்சியின் லட்சியமான "இலங்கையை சுதந்திரமடையச் செய்யும்" காரியம் முடிந்து விட்டதென்று அவர் நினைக்கிறபடியால் மேற்படி செய்தி உண்மையென்று எண்ணலாம்

யூ. என். பி. ரட்சகர்

இதற்கிடையில், பெப்ரவரி மாதத்தில் நடக்கவிருக்கும் "டொமினியன் அந்தஸ்து" விவாதத்தின் பொழுது மெஜாரிட்டியான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக திரு. சேனநாயக்கா அதுவரைக்கும் பிரதம மந்திரியாய் இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது ஏனென்றால் யூ என். பி. கூட்டத்தை சிதைந்துபோக விடாமல் காப்பாற்ற திரு. சேனநாயக்காவுக்குத்தான் முடியும்.

ஒலிவரின் உறுதி

ஸர் ஒலிவர் குணதிலகா இங்கிலாந்தில் இருந்த சமயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இலங்கையின் பாதுகாப்புகள் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தியபின் செய்திருக்கும் உடன்படிக்கையிலுள்ள விஷயங்களை கபினெட் மந்திரிசபையின் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு முழு தென்கிழக்கு ஆசியாவின் யுத்த பலத்தை வலுப்படுத்திக் கொள்ளுவதற்காக இலங்கையிலிருக்கும் கடல்-விமானத் தளங்களையும் கொடுப்பதோடு இலங்கையையே, பிரிட்டிஷாரின் பொக்கிஷத்தை காப்பாற்றக்கூடிய ஒரு யுத்த கேந்திர ஸ்தானமாகவும் செய்வதற்கு ஸர். ஒலிவர் குணதிலகா உடன்படிக்கை செய்ததோடு உறுதியும் கூறியிருக்கிறார் என்று சொல்லப்படுகிறது.

சுடன் கிடைக்குமா?

யுத்த காலத்தில் இலங்கை அரசாங்கத்திலிருந்து இங்கிலாந்து அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு கொடுக்கவேண்டிய கடன் சம்பந்தமாக, சேனநாயக்கா மந்திரி சபையிலிருந்து ஒரு தூதுக் கோஷ்டியினர் சமீபத்தில் இங்கிலாந்திற்கு செல்லவிருக்கிறார்கள் இந்த தூதுக் கோஷ்டியில் ஸர், ஒலிவர் குணதிலகாவும் பொருளாதார மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் இருப்பார்களென்று தெரிய வருகிறது.

ஆட்சேபனை மனுக்கள்

இப்பொழுது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் தேர்தல் ஆட்சேபனை மனுக்களில், பெரும்பான்மையானவை யூ என். பி அங்கத்தவர்களுக்கு எதிராகவே இருக்கின்றன இந்நிலையில் யூ. என். பி.கள் பொதுவாக்காளர்களிடையே எப்படி நடந்திருக்கிறார்களென்று அறிந்து கொள்ள ஹேதுவாய் இருக்கிறது. ஆனால் எவ்வித புகாரோ ஆட்சேபனையே இல்லாத கட்சி இலங்கை தமிழர் காங்கிரசும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுந்தான்.

இலங்கை - சிங்கப்பூர் விமானப் பாய்ச்சல்

பிரிட்டிஷ் விமானத்தின் வெள்ளோட்டப் பயணம்

கொழும்பு, அக் 27

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் விமான சர்வீஸ் ஏற்படுத்த, பி. ஓ. ஏ. சி. விமானமொன்று பரீட்சார்த்தமாக சிங்கப்பூர் சென்று திருப்பியது. வெள்ளிக்கிழமையன்று நீர்கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட இந்த விமானம் 8 மணி 15 நிமிட நேரத்தில் 1800 மைல் தூரத்தைக் கடந்து சிங்கப்பூரை அடைந்தது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் சிங்கப்பூரிலிருந்து புறப்பட்டு நீர்கொழும்புக்கு பிற்பகல் 2 மணிக்குத் திருப்பியது. அந்த விமானம் இன்றைக்கு லண்டனுக்குப் பயணமாயிற்று. அது புதன்கிழமை லண்டன் போய்ச் சேரும். இனி அந்த சர்வீஸில் இலங்கை பிரயாணிகள் சிங்கப்பூருக்கு 9 மணி நேரத்தில் பறந்து போய்ச் சேர்ந்து விடலாம். அநேகமாக பிரிட்டிஷ் கம்பெனி ஆரம்பிக்கும் இந்த இலங்கை சிங்கப்பூர் விமானப் போக்குவரத்து அக்டோபர் 30-ம் தேதிமுதல் ஆரம்பிக்கப்படும். இது வாரத்திற்கு ஒருமுறை நடைபெறும்.

மிரிபலகை பிரயாணி சட்டையில் தீப்பிடித்தது

ஜா-எலை, அக். 27

சிலாபத்துக்கு வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்குப் புறப்பட்ட ரயிலின் மிதபலகையில் பிரயாணம் செய்த ஒருவருடைய சட்டைப் பாக்கெட்டில் எஞ்சினில்இருந்து ஒரு தீப்பொறி வந்து விழுந்துவிட்டது ஆனால் அந்த நபர் அதனைக் கவனிக்கவில்லை. தீப்பொறியினால் அவருடைய பாக்கெட்டில் இருந்த கைக்குட்டையில் தீப் பிடித்துக் கொண்டது. ரயிலில் பிரயாணம் செய்த ஒருவர் அதனைக் கண்டதும் அவருக்குத் தெரிவித்தார். அவர் தமது கைக்குட்டையை வெளியே எறிந்துவிட்டு சட்டையில் பிடித்த தீயை அணைத்தார்.

தம்பதிகளுக்கு நோபல் பரிசு

விவாகமானது முதல் விஞ்ஞான ஆராய்ச்சி

சேயிக்ட் ஹுயில, அக். 26

இவ்வருடம் அளிக்கப்படும் நோபல் பரிசு பாக்டீரியாக்களும் மரீனா, கோரிக்கும் இடைத்திருக்கிறது. நோபல் பரிசின் சரித்திரத்திலே இதற்முன் இரண்டு தம்பதிகள் நோபல் பரிசு பெற்றிருக்கின்றனர் இப்பொழுது மூன்றாவது தம்பதிகளுக்குக் கிடைத்திருக்கிறது. அவர்களைப் பாராட்டி அவர்களுக்கு அனுப்பப்பட்ட பாராட்டுச் செய்திகளை அவர்கள் மிக்க பணிவுடன் ஏற்றுக்கொண்டனர். தோரி தம்பதிகள் தங்கள் வாழ்நாளில் பாதியை விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே கழித்திருக்கிறார்கள்: இவர்கள் 1931-வருடமுதல் வாஷிங்டன் சர்வகலாசாலையில் உயிர்ப் பிராணிகளின் ரசாயன ஆராய்ச்சி நிபுணர்களாக வேலைபார்த்து வருகிறார்கள். இந்த தம்பதிகள் ஏகாகிய சித்தர்களாக விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே தங்கள் அறிவைச் செலுத்தவில்லை. பிரேக்சர்வகலாசாலையில் இவர்கள் மாணவர்களாகப் படித்துக்கொண்டிருக்கும்போதே ஒருவரையொருவர் காதல் செய்தனர். அந்த சர்வகலாசாலையில் எம். டி. பட்டம் பெற்றார்கள் 1931-வருடம் இவர்கள் கலியாணம் செய்துகொண்ட நாள் முதல் விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு வருகிறார்கள் உடம்பிலுள்ள பசையை சர்க்கரையாக மாற்றுவதான "எனிமீ" என்ற முறையை இவர்கள் கண்டு பிடித்ததற்காக இவர்களுக்கு 1947-வருடம் அளிக்கப்பட்ட வைத்தியப் பரிசின் ஒருபகுதி வழங்கப்பட்டது.

கலவர வழக்கில் எதிரிகள் விடுதலை

நூறுபேர் தேர்தல் எதிரொலி

நூரளை, அக் 27

பாராளுமன்றத்தில் நூரளை அங்கத்தினராக இருக்கும் திரு எஸ். தொண்டமான் என்பவரை ஆதரித்து ராகலையில் ஆகஸ்ட் மாதத்தில் நடந்த கூட்டமொன்றில் ஏற்பட்ட கலகவழக்கு நூரளை மாஜிஸ்டிரேட் முன் விசாரிக்கப்பட்டது.

இவ்வழக்கில் எஸ். இராமனுதன், எஸ் இராசையா, எம். கே. வீஜ சுந்தரம், ஆர் வேலாயுதன், எம். சாமினுதன் ஆகியவர்களும் வேறும் எட்டு தொழிலாளர்களும் ராகலையிலுள்ள மெளலாண்டி காரியவாசம் அனைபிரதான்சேநீர்க் கடை முன் சட்ட விரோதமாக கூட்டம் கூடி, அந்த ஸ்தாபனத்தில் ரூ. 6550 மதிப்பு சொத்துக்களை நாசம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இத்தேநீர்க் கடையில் ஒரு கோஷ்டியினர் அடைக்கலம் புகுந்ததாகவும் அவர்களைத் துரத்தி வந்தவர்கள் கடைக்குள் கற்களை எறிந்து சேதம் விளைத்ததாகவும் விசாரணையின் போது தெரியவந்தது. தகுந்த சாட்சியங்கள் இன்மை காரணமாக நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

மழையினால் மண்சரிவு

ஏற்படுமென பீதி

நாவலப்பிட்டி, அக். 27

சுமார் 5 தினங்களுக்கு விடாது தொடர்ந்து மழை பெய்தது காரணமாக மீண்டும் ஒரு வெள்ளப் பெருக்கு ஏற்படக்கூடுமென மக்கள் பீதியடைந்திருந்தனர். ஆனால் வெள்ளிக்கிழமையுடன் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டதால் இப்பீதி குறைந்துவிட்டது.

இம்மழையினால் சில இடங்களின் வீதிகளிலும் ரயில்வே பாதைகளிலும் மண் சரிவுகள் ஏற்பட்டிருந்தன. இச்சரிவினால் குவிந்த மண் உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டது, பெருமழை மீண்டும் ஏற்படின் இப்பகுதியில் மண் சரிவு மிகப் பெரிய அளவில் ஏற்படக்கூடுமென்று பயப்படப்படுகிறது.

மேற்கு ஐரோப்பாவுக்கு அமெரிக்க உதவி

பாரிஸ் அறிக்கையில் மேலும் திருத்தங்கள்

ட்ரூமன் விசேஷக் கமிட்டியின் முடிவு

லண்டன், அக். 26

16 மேற்கு ஐரோப்பிய நாடுகள் பாரிஸில் கூடி அமெரிக்காவுக்கு சமர்ப்பித்த அறிக்கையை அமெரிக்காவின் சர்வ கட்சிகளையும் சேர்ந்த 9 பேர் கமிட்டி இரு தினங்களாகப் பரிசீலனை பண்ணி முடிவு செய்தருக்கிறது. ட்ரூமனின் இந்தவிசேஷக கமிட்டியின் தலைவரான அமெரிக்க வர்த்தக மந்திரி ஹாரிமன் அறிக்கையில் பொதுவான விஷயங்கள் ஒப்புக் கொள்ளப்பட்டன வென்றும் ஆனால் சில கோரிக்கைகளை இன்னும் திருத்த வேண்டிய திருக்கிறதென்றும் தெரிவித்தார். கமிட்டியின் இறுதிக் கூட்டம் நவம்பர் 5-ம் தேதி நடைபெறும்.

[ராய்ட்டர்]

ஜெர்மனியில் எகிப்திய ராணியின் சிலை

திருப்பிக் கொடுக்க அமெரிக்கர் மறுப்பு

பெர்லின், அக். 26

3000 வருடங்களுக்கு முன்பு எகிப்தை ஆண்ட ராணி நெபரெட்டியின் உருவச்சிலை இப்பொழுது ஜெர்மனியின் கலைப் பொக்கிஷத்தில் இருந்து வருகிறது. அந்த அழகான அரிய புதச் சிலைமீது பிரமை கொண்டிருந்த ஹிட்லர் அது வெடிகுண்டுகளால் சேதமுறாது மிகவும் பத்திரப் படுத்தி வைத்திருந்தார். இச்சிலையை ஜெர்மன் புதைபொருளாராய்ச்சி நிபுணர் பல வருடங்களுக்கு முன் எகிப்திலிருந்து ஜெர்மனிக்குக் கொண்டு சென்றார். யுத்தத்திற்குப் பின் அமெரிக்க நிர்வாகத்திற்குட்பட்ட ஜெர்மன் பிரதேசத்தில் இது அகப்பட்டது. இந்த சிலையை எகிப்துக்குத் திருப்பிக் கொடுக்கும்படி எகிப்திய சர்க்கார் தெர்மனியிலுள்ள அமெரிக்க ராணுவ நிர்வாகத்தினரைக் கேட்டார்கள். ஆனால் அமெரிக்கர் மீண்டும் ஜெர்மனியில ஜோமன் சர்க்கார் ஏற்பட்ட பிறகுதான் அதைப்பற்றி அவர்கள் முடிவுசெய்ய வேண்டுமென்று சொல்லி, அமெரிக்கர் எகிப்து சர்க்கார் வேண்டுகோளை நிராகரித்து விட்டனர்.

(ராய்ட்டர்)

ஸ்ரீ. சா. சுப்பிரமணிய பிள்ளைக்கு ஞாபகார்த்தம்

மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் அஸதிவாரக் கல் நாட்டினார்

திருநெல்வேலி, அக். 20

காலஞ்சென்ற ஸ்ரீ கா. சுப்பிரமணியபிள்ளை ஞாபகார்த்தமாக இங்கு 'விக்டா' ஆர்ச்சுக்குப் பக்கமாக ஞாபகார்த்த கலை ஒன்றை சென்னை மந்திரி ஸ்ரீ எம் பக்தவத்ஸலம் 13-ம் தேதி மாலை நாட்டினார். ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளை, சட்டக் கலூரியில் தனக்கு ஆசிரியராக இருந்தாரென்றும், சிறந்த அறிவாளியென்றும், தமிழ்மொழிக்கு பெருந்தொண்டு செய்திருக்கிறாரென்றும் மந்திரி கூறினார்.

மந்திரிக்கு சைவசித்தாந்த கழகத்தின் சார்பில் ஸ்ரீ வி சுப்பையாபிள்ளை உபசார பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தார்.

ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளையின் சேவைகள் குறித்து ஸ்ரீமான்கள். பி. ஆவுடையப்பபிள்ளை, என். சின்னக்கண்ணுபிள்ளை, வடிவேலு முதலியார், சிவகுருநாதபிள்ளை, ராசாக் கண்ணனார் முதலியவர்கள் பேசினார்கள்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

எங்கும் பந்துமித்திரத்துவமா?

ஐயா,

ஏழை மக்களுக்கென ஆங்காங்கு ஐக்கிய பண்டகசாலைகள் ஆரம்பப்பட்டன அது உண்மையில் ஏழை மக்கட்கு சிக்கன வாழ்க்கையை ஏற்படுத்தும் சின்னம்தான். இது காலகெதியில் தேய்வடைய ஆரம்பித்து விட்டது. ஏன்? அதில் பேரன் முதல் பூட்டன் வரை காரியஸ்தர்கள் தலைவன் கோந்துறுவாகவே இருப்பார். இவர் தலைமையிலேயே பண்டகசாலை குறையாட்டம் நடைபெற ஆரம்பித்து விடும். பண்டகசாலை மேல் மாடியிலிருந்து யிறகுகள் தொங்கவிடப்பட்டிருக்கும். காலை 4 மணிக்கே பண்டகசாலை குறைபாடப்பட்ட செய்தி ஊரெங்கும் அறிவிக்கப்படுவிடும். ஏழைகள் பணத்தினால் ஆக்கப்பட்ட பண்டகசாலை விஷயம் எப்படி? தமக்குள் தாமே பங்கீடு முடிந்ததும் இதை நாம் யாரிடம் முறையிடுவோம் "உரல்போய் மத்தளத்திடம் முறையிட்ட செய்தி போலாயிற்று." வாழைமரம் ஒன்றைப் பாருங்கள் அதன் வடிவம் எவ்வளவு அமைப்புப் பெற்றிருக்கிறது! அதன் பசுமையான இலைகள் சளதளவென்று உயிரொளி மிளிரும் தண்டு. அடியில் பட்டுபோல் பழுப்பேறிய அழகான பட்டை. என் வேலை முடிந்தது, வளரும் செடியின் வளர்ச்சிக்குக் காப்பாகக் கீழ் கிடக்கிறேன். தடையாக நிற்க மாட்டேன் என்று வாய்திறந்து பேசுவதுபோல இருக்கிறது உயிர் படைத்த ஒரு ஜன சமூகத்தின் பண்பாடிற்கு வாழைமரம் எவ்வளவு பொருத்தமானது. இப்பண்பாடு கூட நம் அரசியல உலகத்தில மழுங்கி விட்டதே. அரசியலுள்ளும் கோந்துறு தலைமை. நீ, நான், நான், நீ என்று ஆகாயவாணியும் செவிடு படும்படியாக ஏழைமக்களாகிய நமக்கு இதமொழி உபதேசம் கேட்பமா? "வடலவனுக்கு வல்லவன் இவ் வையகத்து லுண்டு" என்று தடங் கொள்ளவே, "தனி ஒருவனுக் குணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்னும் கவியரசன் பாரதி சொல்லுடன் வந்தார்கள் ஐயா நம் தனிப் பெரும் தலைவர்கள் அவர்கள உண்மைத் தியாகிகளே. இவர்களை எம் தாய் தந்தையர். மலை கலங்கினும் மனி கலங்கா வீரர்கள் இனி நாம் குடும்ப அரசியலை எதிர்த்து வெற்றி பெற தயங்கமாட்டோம். பாடுபடாளிகளாக ஒன்று சேர்வோம். இறுதிவரை பகை நோக்கோம் கண துஞ்சோம். கருமமே கண்ணாக நிறபோம் இதுவே எம் துடமொழி.

"பெருமரத்தைப் பற்றிய பல்லியும் பாழ் போகாது."

இங்ஙனம்,
வட இலங்கா ஊழியன்,
(நாவலர் மடம்)

பகத்தலை. கே. வி. கே.
18-10-47

நல்லையாவின் நன்றிகெட்ட தனம்

ஐயா,

17-10-47ல் வெளிவந்த "சுதந்திரனில்" "பதவிமோகமா, வாக்குத் துரோகமா" என்னும் தலையங்கத்தின் கீழ் கற்குடா அங்கத்தினர் திரு. நல்லையாவைப்பற்றி வெளிவந்த கடிதத்தைக் கண்ணுறுறேன்.

ஆம், தேர்தல் காலத்தில் றவாத படலைகளைத் திறந்து, நடவாத ஓடைகளெல்லாம் நடந்து, கையெடுத்துக் கும்பிட்டு தமிழரின் வோட்டுகளைக் கேட்டுத் தம்மை ஆதரிக்க வேண்டுமெனப் பல்லிளித்து மன்றாடினார். தெய்வநாயகம் அவர்களுக்கு ஆதரவளிக்கவிருந்த அத்தனைபேர்களும் மனமிரங்க நல்லையாவிற்கு வாக்குக்கொடுத்தனர். ஆசிரியர்களும் மாணவர்களும் இரவுபகலாய்உழைத்தனர். நல்லையாவும் பல வாக்குறுதிகளைச் சொல்லி மிகக் கஷ்டத்தின் பேரில் இத்தேர்தலில் வெற்றி பெற்றார் சுயேச்சை அங்கத்தினராய் நின்று வெற்றி பெற்ற திரு. நல்லையா அவர்கள், உதவியோக மோகங்கொண்டு சேனநாயக்காகொடுத்சவரப்பிரசாதமாகிய, "காரியசரிசி" பதவியை இரு கைகளாலும், மனங்குளிர்ப் பெற்றுக் கொண்டார் இசனர்த்தமென்ன? செத்தும் சாகாமல் இருந்த யூ என் பிக்கு சேராமல் சேர்ந்து கொண்டார் நல்லையா? "உறுமீன் வருமளவும் வாடியிருந்த கொக்கானார்! கற்குடா வாக்காளரே! சிந்தித்துப் பாருங்கள், தமிழரையே நசுக்கக் கங்கணம் கட்டி சிங்களக் கொடியை, இலங்கைக் கொடியாக்க எண்ணியிருக்கும் சேனநாயக்காவும் பலுட சேர்ந்து கொண்டு கூட்டத்தில் கோவிந்தா போடுகிறார் நமது பிரதிநிதி. இதுதானா இவர் நமக்களித்த வாக்குறுதி? கடந்த அரசாங்க சபையில் இருந்தபோதும் நம்மவருக்கு ஏதாவது உருப்படியான நன்மைகள் செய்திருக்கிறாரா? தனது சொந்தக்காரருக்குச் சில உத்தியோகங்கள் தேடிக் கொடுத்திருக்கிறாரேயன்றி வேறென்ன செய்துள்ளார்? இப்போது சேனநாயக்காவுடன் சேர்ந்து அவருக்குப் பந்தம் பிடித்து நம்மை மீளா அடிமைகளாக்க முன்வந்துள்ளார். தேசாபிமானம், சமூகாபிமானமுள்ளவராயுல் இப்படிச் செய்வாரா? வாக்காளச் சகோதரரே இனியாவது ஏமாறாமல் விழிப்பாய் இருங்கள் பகுவிவேட்டைக்காரரின் சூழ்ச்சிக் கிணங்காதீர்கள்.

உணர்ச்சியும், உண்மைத் தேசாபிமானியும் சமூகத் தொண்டனுமானால், திரு. நல்லையா அவர்கள் தனது காரியசரிசி பதவியை ராஜினாமாச் செய்து மற்றும் தமிழுலகத்தவர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கட்டும், இலையேல் பாராளுமன்றத்துப் பதவியை இராஜினாமாச்செய்து இன்னொருமுறை நற்கடாக்ஷ தொகுதிகளுக்குப் போட்டியிட வரட்டும்; அப்போது தக்க பாடம் படிப்பிக்கக் காத்திருக்கிறோமென்பதைப் பகிரங்கமாய் அறிவிக்கிறோன்.

நன்றி மறந்த திரு நல்லையா அவர்கள் இக்க என் கவலையை எற்றுக் கொள்ளுவாரா? அன்றேல் சேனநாயக்காவின் மந்திரத்திலே மயங்கிப் போவரா? இருந்து பார்ப்போம்.

இங்ஙனம்,
சீனித்தம்பி, செங்கலடி.
20-10-47.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ரானி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் விலை ரூ. 2-50

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முன்பணம் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு, கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சிராப்பள்ளி

"அமிர்த ப்ராஸ்" கருணைக்கிழங்கு லேகியம்.

மாட்டுக் கருணைக்கிழங்கும் அரிய உயர்தர மூலிகைகளும் சேர்ந்தது.
மூலமுளைகள் ரத்தம் சிறுவடிதல், பவுந்திரம், வாய்வு, மூல உஷ்ணம் சுகமாகும்.

24 நாள் அமிர்த ப்ராஸ் (காலை) ரூ. 4-8-0
" நாக பஸ்பம் (மாலை) " 5-0-0
மூலமுளைக் களிம்பு 1 புட்டி 1-0-0
(கேட்லாக் இனாம்) வி. பி. செலவு ரூபா 1-8-0

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி. (S India)

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029
டெலிகிராம்: ENVAITLIN
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.

புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரோச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபால்பெட்டி 243)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளைக் கோஷ்டியிடம் இராணுவ ஆயுதங்கள்

கண்டுபிடிக்க போலிஸாரின் தீவிர முயற்சி

சிறைக் கம்பியைத் துண்டித்து வெளியேறிய கைதி

உள் நாட்டு-சர்வ தேச அறிவு

சோவியத் ரஷியாவில் மக்களிடையே தீவிர பிரசாரம்

(ராய்ட்டர் மாஸ்கோ நிருபர்)

மாஸ்கோ, அக். 26

உள்நாட்டு சர்வ தேச விவகாரங்கள் எல்லாவற்றையும் பற்றி சோவியத் மகா ஜனங்கள 19 கோடி 50 லட்சம் பேரும் உணர்ந்துகொள்ளச் செய்வதற்காக இப்போது மிகுந்த முயற்சி இங்கு எடுக்கப்பட்டு வருகிறது.

கமியூனிஸ்ட் கட்சித் தலைவர்களால் முக்கியமான சோவியத் நிர்ணயங்கள் திட்டங்கள்பற்றி அறிவூட்டும் கல்வி முறை ஒன்று கண்காணிக்கப்படுகிறது. 'நமது சகாப்தத்தின் பெருமை" என்று பலரால வர்ணிக்கப்படும் சோவியத் பிரஜை முதலாளித்வ உலகின் பிரஜையை விட உயர்ந்தவனாவது ஏன்?-முதலாளித்வ ஏகாதிபத்தியம் ஆகியவற்றைக் கட்டி அழும் பழைய உலகு மண்ணாக அழிந்து வருவதேன்?- போன்றவை பற்றி சோவியத் பிரஜை ஒவ்வொருவனும் அறிந்திருக்கச் செய்யவேண்டும்.

இந்த அறிவூட்டும் பிரசாரத் திட்டத்தை இராணுவ கட்டுப்பாடு வாய்ந்த கமியூனிஸ்ட் கட்சியும் அதன் சிறு கிளைகளும் தொழிற்சாலை, விவசாயப் பண்ணை, அரசாங்கக் காரியாலயம் எங்கெங்கும் அமுல் நடத்திச் செல்கிறது

ஒவ்வொரு வேலைத் தளத்திலும் கமியூனிஸ்ட் கட்சிக் குழுக்களை வேலை செய்கின்றன அவை நகரக் கிளைகளில் இணைக்கப்படு அகக்களைகள் நாட்டின் கட்சியோடு பொருத்தப்பட்டிருக்கிறது. சோவியத் யூனியனில் பல நாடுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டுக் கட்சியும் சோவியத் யூனியன் மத்திய கமிட்டியோடு தொடர்பு கொண்டுள்ளது. இங்ஙனம் கட்சியமைப்பு ஒரு சங்கிலித் தொடர்புபோல் எங்கும் பரவும்படி பின்னப்பட்டிருக்கிறது.

கட்சித் தலைவர்கள், முனிசிப் பல்வேறு பொதுத் தலைவர்கள், சிறந்த அறிவாளர்களாயிருக்க வேண்டும் என்பது அரசாங்கக் கொள்கை. இவர்கள் மாஸ்கோவில் உள்ள கமியூனிஸ்ட் மத்திய கமிட்டியால் நடத்தப்படும் உயர்தர கட்சிப் பாடசாலை எனும் "கமியூனிஸ்ட் சர்வ கலாசாலை"யில் பயிற்றப்படுவார்கள்

அங்கு இப்பொழுது மொத்தம் 980 மாணவர்கள் மூன்று வருட பயிற்சி பெற்று வருகிறார்கள். அன்றாட விஷயந்தொட்டு சலாச்சார சாஸ்திரம் வரை விரிந்த ஒரு சம்பூர்ணமான பயிற்சித் திட்டம் இது இன்னும் 500 க்கு அதிக 'மாணவர்' குறுகிய கால ஒன்பது மாதக் கல்விபெற்று வருகிறார்கள். இம்மாணவர்களில் நீண்ட கால மாகப் பொது சேவை செய்யும் கட்சித் தலைவர்களுமுண்டு.

கலை, இலக்கியம், விஞ்ஞானம், தத்துவம் ஆகியவற்றை சாதாரண 'முதலாளித்துவக்' கண்கொண்டு பார்க்காதுமார்க்ஸிஸக' கண் கொண்டு மதிப்பிட மாணவர் இங்கு பயிற்றப்படுவார்கள்.

மொத்த 16 குடியரசுகளில் பரந்து கிடக்கும் 56 தேசிய இனத்தினர் அல்லது ஜாதியினர் இங்குள்ள உயர்தர கட்சிக் கலாசாலையில் கல்வி கற்கின்றனர்.

போதகாசிரியர்களில் பல பெண்களும் இருக்கின்றனர் இவர்கள் பொறுக்கி எடுக்கப்பட்ட சிறப்புடையவர்கள். இவர்களில் 13 பேர் விஞ்ஞானக் கலாமன்ற அங்கத்தினர், 60 பேராசிரியர்கள், 32 ஆசிரியர்கள் உள்ளனர்.

கலாசாலையின் விஞ்ஞான சபை இவர்களுக்கு விஞ்ஞான அபேட்சகர் எனும் பட்டத்தை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

கொழும்பு, அக் 28

இப்பொழுது விஜயகுரியா ஆராச்சிகேடொன் சார்ள்ஸ என்பவரையும், அதிகாரி வட்டகே டொன் சுகததாஸாஎன்பவரையும் பொலிசார் தேடிவருகின்றனர் இவர்கள் இருவரும் 24 வயதானவர்கள் என்று கூறப்படுகிறது. இவர்களைக் கைதுசெய்ய தகவல் கொடுப்பவர்களுக்கு பரிசு வழங்கப் படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் இருந்து ஆகஸ்ட் 29-ம் தேதி ரயிலில் கொண்டுவரப்பட்ட இவர்கள் இருவரும் பியதாஸா என்பவரும் பம்பலப்பிட்டிக்குப் கொள்ளைப்பிடிக்கும் இடையில் தப்பியோடிவிட்டனர் பியதாஸா மீண்டும் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார் மூவரும் மாஜி போர்வீரர்களாகும்.

இப்பொழுது கிடைத்துள்ள தகவல்களின்படி டொன் சார்ள்ஸ் என்பவரிடம் ஏராளமான யுதகதளவாடங்கள்-துப்பாக்கிகள், எறிகுண்டுகள்- மருந்து வகைகள்-வைரதிரவியதாசவுபவ இவற்றை இவர் இத்தாலியிலிருந்து கொண்டுவந்து கள்ளமாக இலங்கையில்சேர்த்திருக்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

இலங்கையில் சமீபத்தில் நடைபெற்ற வழிப்பறிகள், கொள்ளைகள் முதலானவுக்கு இவர்களே காரணமாக இருக்க வேண்டுமென்று சந்தேகிக்கப்படுகிறது.

வெளிச்கடை மறியல் வீட்டில் இருந்து செப்டம்பர் 21-ம் தேதி தப்பியோடிய டொன் ஜேமிஸ் வீஜயரத்தினா ஜெயசுந்தரா என்னும் கைதியை (15 வருடம் 5 மாதச் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டியவர்) பிடித்துக் கொடுப்பவர்களுக்கு பரிசு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் சிறைச்சாலை இரும்புக் கம்பியை ஒரு இரும்பு துண்டிகும் வாளால் வெட்டி தப்பித்துக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

பெட்ரோல் கட்டுப்பாடு

மோட்டார் கார் சொந்தக்காரர்கள் எதிர்ப்பு

பிரிஸ்டல், அக். 27

குளோசெஸ்டர்ஷயரிலுள்ள சுமார் 700 மோட்டார் சொந்தக்காரர்கள் பிரிட்டனின் அடிப்படைப் பெட்ரோல் அலவன்ஸ் முறையைக் கண்டித்து அந்த அலவன்ஸ் முறையை ரத்துச் செய்யும்படி கோரி ஊர்வலம் நடத்தினர். இதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டமுமொன்று நடைபெற்றது (ராய்ட்டர்)

செக் தூள்கள் திருடியதாக வழக்கு

கொழும்பு, அக 28

மாஜி தொழில் மந்திரி திரு. ராஜலேவர்தாரணுவிற்குச் சொந்தமான 61 வகை நோட்டுப் பத்திரங்கள் திருடியதாகவும் வேறும் பல குற்றங்களும் பிரமதலகா மாஹிந்த, பி. எம் பொன்னுன்டோ ஆகிய இருவர் மீதும் சாட்டப்பட்டுக் கொண்டுவரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. எல். ஸ். ஹால் தலைமையில் எடுக்கப்பட்டது. 29-ம் தேதியை இனங்கண்டு பிடிப்பதற்கு தெரியும் தினமாக நீதிபதி நியமித்து விசாரணையை ஒத்திவைத்தார்.

ஸ்ரீநகருக்கு இந்தியத் துருப்புகள் பாய்ச்சல்

(1-ம் பக்க தொடர்ச்சி)

உபசாரத்தை நான் பாராட்டிக்கிறேன்.

திரு. ஜாஹீரை வரவேற்று ஸர். சவாஸ்ஜி ஜிஹாங்கீர் பேசியபோது பாகிஸ்தான் இன்னும் பதினாயிரம் பார்ஸிகள் அகப்பட்டதாகத் தெரிவித்தார்

இரு தேசக் கொள்கையை நம்பினால் இடமில்லை

பம்பாய், அக் 26

பாராசிகத்தின் இந்திய ஸதானிதிபதி திரு. சையது அலி ஜாஹீர் பத்திரிகா நிருபருக்களிடம் பேட்டியில் தெரிவித்ததாவது:-

முஸ்லிம்கள் இந்தியாவைப் பிரிக்கும் பாக்கிஸ்தான் ஏற்படச் செய்த உழைப்பின் பலாபலன்களை இப்பொழுது அனுபவிக்கிறார்கள். இன்னும் பாகிஸ்தானைக் கைவிட்டு மீண்டும் ஐக்கிய இந்தியாவுக்கு இணங்கினால் தான் முஸ்லிம்கள் க்ஷேமமாக வாழ முடியும் பதினாறு கோடி முஸ்லிம்களை சுட்டிக் காட்டி பாகிஸ்தானுக்காக ஜனப் ஜின்னா பிரசாரம் செய்தார்

இப்பொழுது அந்த பத்துக் கோடி முஸ்லிம்களும் தவறுக்கும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்திய யூனியனில் கைவிடப்பட்ட முஸ்லிம்கள் முஸ்லிம் லீக்கைக்கலைத்துவிட்டு தங்கள் நலனைப் பாதுகாக்க புதிய தலைவர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். புதுக் கொள்கையை வகுக்க வேண்டும். ஐக்கிய மாகாணம், பாம்பாய் பீகார் முதலிய மாகாணங்கள் இவைகளிலுள்ள முஸ்லிம்களின் ஆதரவு தான் ஜனப் ஜின்னாவுக்கு பாக்கிஸ்தான் கிடைத்தது. ஆனால் இதனால் இப்பொழுது அந்த இந்திய முஸ்லிம்கள் அவதிக்குள்ளாகும் நிலையை ஏற்படுத்திவிட்டார். இந்திய டொமினியனிலுள்ள எல்லா முஸ்லிம்களும் வெளியேற வேண்டுமென்று இப்பொழுது ஹிந்து மகா சபை போன்ற ஸதாபனங்கள் கோருகின்றன அவர்களுக்கு நாம் தர்க்க நீதியில் பதிலளிக்க முடியுமா? இப்பரந்த உபகண்டத்தில் நிரந்தரமாகவுள்ள எல்லோருடைய சுபீட்சத்திலும் ஐக்கியத்திலும் காந்தஜி பணிபுத்த நேரு தலைமையிலுள்ள காங்கிரசுக்கு இன்னும் நம்பிக்கை இருந்து வருகிறது.

இந்திய டொமினியனில் குழப்பதையும் கலகத்தையும் கலப்பும் நேர்க்கத்துடன் தான் ஸ்ரீ ஜின்னாவும் அவரது கூட்டாளிகளும் இன்னமும் ஆத்திரமூட்டும் வகையில் பேசி வருகிறார்கள் அது முஸ்லிம்களின் நலனுக்கு உகந்ததல்ல; இந்தியாவைபலவீனப்படுத்து உலகில் அதன் கௌரவத்தைக் குறைக்க வேண்டும் என்பதுதான் அவர்களது முக்கிய குறிக்கோள்.

அந்நியர் உதவி ஏராளமாக வேண்டும்

நியூயார்க், அக் 26

இங்குள்ள பாக்கிஸ்தான ஸ்தானிகர் இஸ்பஹானி இங்கு புதிதாக ஏற்படுள்ள பாக்கிஸ்தான லீக் கூட்டத்தில் பேசிய போது பின்வருமாறு குறிப்பிட்டார்:- பயங்கர ஆட்சியின் காரணமாக பாக்கிஸ்தானில் 40 லட்சம் அகதிகள் வந்து குடிபுகுந்திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு, உடை, வீடு முதலிய வசதிகள் அளிப்பதற்கு அந்நிய நாடுகளின் உதவி ஏராளமாகத் தேவையிருக்கிறது. இங்குள்ள பாகிஸ்தானியர்கள் 1300 டாலர் கொடுத்திருக்கிறார்கள் பாக்கிஸ்தானில் கைத்தொழில் பிற்போக்கான நிலையிலிருக்கிறது. இனித்தான் அங்கு கம்பளி, சணல், பருத்தி ஆலைகளும் மின்சாரத் திட்டங்களும் ஏற்படுத்தி திட்டங்களை முதலாளி துறைமுகமாக்க வேண்டும் பாகிஸ்தானின் அந்நிய நாட்டுக்கொள்கை பிற நாடுகளுடன் முக்கியமாக முஸ்லிம் நாடுகளுடன் நேசப்பான்மையாக இருப்பதுவே.

லீகிலிருந்து பிரமுகர் ராஜினாமா

லக்ஷ்மணபுரி, அக் 26

மகமூதாபாத்தைச் சேர்ந்த மகாராஜகுமார் முகம்மது அமீர் அலிகான முஸ்லிம் லீகிலிருந்து ராஜினாமாச் செய்துவிட்டார்.

அவர் கூறுவதாவது:- முஸ்லிம் லீக் இனியும் இருந்து வருவதால பயன் இல்லை அதைக் கலைக்க வேண்டும். பாகிஸ்தான ஏற்பட்ட பின் பணக்கார லீக் தலைவர்கள் தங்கள் புகிய தாயகத்துக்குப் போய் விட்டார்கள். இந்திய முஸ்லிம் மக்களுக்கு எக்கதி நேர்ந்தாலும் சரி என்று அவர்கள் போய்விட்டார்கள். வழிகாட்டி ஊக்கமளிக்க தலைவர்களை முஸ்லிம்கள நோக்குகிறார்கள். ஆனால் அவர்கள் முன்வரலீக் தலைவர்களுக்கு தைரியம் இல்லை. இரண்டுங்கெட்ட நிலையில உள்ள புதிய முஸ்லிம்கள இறைய தேவைப்படி தங்களுக்கு ஒரு வேலை நடத்தை லீக் கொடுக்க வேண்டும் எனக் கோருகிறார்கள். ஆனால் அக் கோரிக்கைகளுக்கு செவி சாய்ப்பார் இல்லை

பாகிஸ்தான் டொமினியனை எதிர்த்துக் கூட இந்திய யூனியனுடன் சேர்ந்து போர் செய்ய விசுவாசம் உள்ள இந்திய முஸ்லிம்கள் உறுதி கொண்டுள்ளனர்.

ஆகாகான் சீடர்களின் தீர்மானம்

பம்பாய், அக். 26

"இந்திய யூனியனுக்கு, அதன் அரசியலமைப்புச் சட்டம், அதன் கொடிகளும் மனப்பூர்வமாக விசுவாசமாக இருப்போம். நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதில் இந்திய சர்க்காருக்கு பரிபூரணமாக ஆதரவளித்து, அதுதுடன் ஒன்றாழைப்போம்" என்று இன்று நடைபெற்ற, ஆகாகான் சீடர்களான வியா இமாமி சமயத்தவர் கூட்டத்தில் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது இந்த தீர்மானத்தின் நகல்கள், ராஷ்டிரபதி ஆச்சாரிய கிருபளானி, ஆகாகான், பிரதமர் நேரு, காந்தஜி, மாகாண சர்க்கார்களின் பிரதமர்கள் முதலியோருக்கு அனுப்பப்பட்டன.

பீஹார் மோமின் முஸ்லிம் கூட்டத்தில் தீர்மானம்

மெய்னு, அக். 26

முஸ்லிம் லீகின இரண்டு தேசக் கொள்கையைக் கண்டித்தும் காங்கிரஸில் ஏராளமானவர் சேரவேண்டுமென்று முஸ்லிம்களைக் கேட்டுக்கொண்டும் அ இ மோமின மகாநாட்டின் தலைவரும் அதிகிகள் நிவாரண மந்திரியுமாகிய அப்துல் கையூம் அன்ஸாரி தலைமையில் நடந்த பீஹார் முஸ்லிம்களின் பொதுக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது

அப்துல் கையூம் அன்ஸாரி மேலும் சொன்னதாவது. ஜின்னாவின் இரண்டு தேச சித்தாந்ததைக் கைவிட்டுவிட்டாலும், நீங்களும் அதை கைவிட வேண்டியதே. இந்தியாவில் உங்களுக்கு தேவையான தலைவர்களை நீங்கள் பார்க்கத்தக் கொள்ளுங்கள் என்று ஸ்ரீ ஜின்னா சொல்லியிருப்பதை சிந்தித்து பாருங்கள் பாகிஸ்தான் ஒரு இஸ்லாமிய தேசமாய்விட முடியாது

பாக்கிஸ்தான் ஏற்பட்டதன் மூலமாக மற்றெல்லா சமூகங்களையும் விட முஸ்லிம் சமூகம் தான் அதிக நஷ்டம் அடைந்திருக்கிறது.

போலிஸ் அதிக்ரமங்கள்பற்றி விசாரணை நடத்த ஒரு கமிடி நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மற்றொரு தீர்மானம் நிறைவேறியது

அப்துல் பஜீத் யோசனை

புதுடில்லி, அக். 26

தேசிய முஸ்லிம் தலைவர் புரபஸர் அப்துல் மஜீத் (பஞ்சாப்) விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:-

இந்தியா யூனியனிடம் விசுவாசமாயிருப்பதாக எவ்வளவு அழுத்தமாக இப்பொழுது சொன்னாலும் பம்பாய், பர்மா, பீஹார் லீக் தலைவர்களின் அபரும் ஆதரவினால்தான் பாகிஸ்தான் ஏற்பட்டிருக்கிறதென்பது பகிரங்க ரகசியம். திடீரென மனமாறுதல் ஏற்படுவட முடியாது; ஆகவே லீக் தலைவர்கள் காரியதரிசிகள் போன்ற முக்கியமான லீக் நிர்வாகிகள் உடனே பாகிஸ்தானில் குடியேறி இந்தியாவில் லீக் ஸ்தாபனம் கலைக்கப்படுவதை சுலபமாக்க வேண்டும் அவர்தன் தங்கள் இஷ்டப்படி.

வறட்சியால் காட்டுத் தீ பரவுகிறது

அமெரிக்க மாகாணத்தில் பெரும் நஷ்டம்

வாஷிங்டன், அக் 27

நியூ இங்கலாந்து ஸ்டேட்டுக் கூடாக காட்டுத் தீ பரவியதால் மெயினி என்னும் பகுதியில் 2500 பேர்கள் வீடுகளை இழந்ததும் 18 பேர்கள் கொலைபட்டுள்ளனர் என்றும் கூறப்படுகிறது இப்பொழுது மீண்டும் காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது இந்த ஏற்பட்டுள்ள சேதம் 40 000,000 ஸ்டெர்லிங்கள் இருக்குமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது இந்த இடம் ஆபத்தான பகுதியென ஜனாதிபதி ட்ரூமன் பிரகடனம் செய்துள்ளார்.

அநந்ததியார் சங்கம் 4-வது ஆண்டு விழா

கொழும்பு, அக் 26

தமிழ்நாடு அநந்ததியார் சமூகச் சீர்திருத்தச் சங்கத்தின 4 வது ஆண்டு நிறைவுவிழா சென்ற சனிக்கிழமை மாலையில நடைபெறறது.

பாராளுமன்ற மஸ்கேலியாப் பிரதிநிதி திரு ஜி. ஆர் மோத்தா தலைமை வகித்தார்.

திரு. மோத்தா, சங்கத்தார் சமூக முன்னேற்றத்திற்கு வேண்டி அயராது உழைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

திருவாளர்கள், திராவிடக் கழகம், இராஜலிங்கம், இளஞ்செழியன் முத்துராம், பகவதி, சுந்தரராசு, ஹமீது, மாயக்கிட்டணன முதலியபலரும்பேசினார்கள்.

பின்வரும் தீர்மானம் நிறைவேற்ற படடது:- "இலங்கையில இன்னும் தல தேநீர்க் கடைகள் இச்சமூகத்தவருக்கு ஏனையோரைப் போன்று சமத்துவமாக தேநீர் வழங்க கடைக்காரர்கள் மறுப்பதை இச்சங்கம் மிக வருத்தமாகக் கண்டிபதுடன இவ்வித அநாசாரமுழக்கத்தை விடுமபடி தேநீர்க் கடைக்காரர்களையும், குறிப்பாக ஸ்தல ஸ்தாபனங்கள் உடனடியாகச் சட்டங்கள் இயற்றி இக்கொடுமையை ரத்துச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும கேட்டுக் கொள்ளுகிறது.

வெளியேறுவிடில் அவர்களை வெளியேறும்படி சாக்காரே தூண்டுதல் செய்ய வேண்டும். பாகிஸ்தானிகள் இந்தியாவில் இருக்கும் வரையில் பாமர முஸ்லிம் மக்கள் ஏமாற்றப்படுதவருன வழியில் நடத்திச் செல்லப்படுவார்கள். அவர்களின் குற்றத்துக்காக நிரபராதிகள் துன்பப்படுவார்கள்.

இந்தியயூனியனிலிருந்து விரும்பத்தகாத லீக்கர்களை வெளியேற்றிய பின்னர் வகுப்புப் பிரச்னையை பொருளாதார, அரசியல சமூகத துறைகளில் தீரமாக சமாளிக்க முயல வேண்டும். அரசியல் துறையில் கூட்டுத் தொகுதி ஏற்படுத்த வேண்டும மத அடிப்படையில் அரசியல் பொருளாதார சமூக உரிமைகள் விநியோகிக்கப்படுவதே இத்தேசத்தில் பெரும் அனர்த்தமாக இருந்து வந்திருக்கிறது. வகுப்பு வாதத்தை பூண்டோடு ஒழிக்க வேண்டும்

ஆசிய தொழிலாளர் மகாநாடு

டில்லியில் நடைபெறுகிறது

புதுடில்லி, அக் 26

அரசியல் நிர்ணயசபை மண்டபத்தில 22 தேசங்களில் 400 பிரதிநிதிகள் அடங்கிய ஆசியா தொழிலாளர் மகா நாடு நாளை ஆரம்பமாகிறது. ஆசியாவில் நடைபெறும் இம்முதலாவது மகாநாட்டில் ஆசிய நாடுகளின் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கோடிக்கணக்கான தொழிலாளர் நலன்களைப்பற்றியல பிரச்னைகள்விவாதித்து முடிவுசெய்யப்படும்.

பிரிட்டிஷ் பிரதிநிதிகள்

சர்வ தேச தொழில் ஸ்தாபன சீர்வாக கமிஷனுக் தலைவரும் பிரிட்டிஷ் தொழில் மந்திரி காரியாலயத்தின் உதவிக் காரியதர்சியுமான ஸர் இவான்ஸ பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கோஷ்டிக் தலைவராக மகாநாட்டில கலந்து கொள்கிறார். 20 பேர் கொண்ட பிரிட்டிஷ் பிரதிநிதிகள் கோஷ்டியில் சுரங்கத் தொழிலாளர் தலைவர் திரு. லாதாம் பாக்குவரத்து தொழிலாளர் தலைவர் பாடவொர்த்து மிருக்கிறார்கள். ஆசிய தொழிலாளர்களை நிலையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது பற்றி இம்மகாநாடு இரு வாரங்கள் நடைபெறும்

இந்திய சர்க்கார் சார்பாக இந்தியா பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு பிரதிநிதிகளை வரவேற்றுப் பிரசங்கம் செய்வார் இந்த மகாநாடு ஆசியா தொழிலாளர் பார்லிமெண்ட் என்று அழைக்கப்படுகிறது

மலேயா பிரதிநிதிகள்

கல்கத்தா, அக் 26

ஆசியா தொழிலாளர் மகாநாடுக்கு விஜயம் செய்யும் மலேயா, சிங்கப்பூர் பிரதிநிதிகள நேற்றும் இன்றும் கல்கத்தாவழியாக டில்லிக்குச் சென்றார்கள. சிங்கப்பூர் தொழில் கமிஷனர் திரு ஆர் பிங்கம் தலைமையில் சிங்கப்பூர் பிரதிநிதி கோஷ்டியும் மலேயா பிரதிநிதிகள் கோஷ்டி மலேயா தொழில் கமிஷனர் திரு. ஹௌட்டன் தலைமையிலும் சென்றார்கள்

இந்தோ-சைனா பிரதிநிதிகள்

இந்தோ-சைனாவிலிருந்து இங்கு வந்த 13 பிரதிநிதிகளும் டில்லிக்குப் பயணமானார்கள்.

பிரெஞ்சுப் பார்லிமெண்டிற்கு பொதுத் தேர்தலா?

டி கால் நோலாம்

பாரிஸ், அக் 26

பிரெஞ்சு முனிசிபல் தேர்தல்கள் முடிவடைந்துவிட்டன. தேர்தல் முடிவுகள் இன்னும் முழுவதும் வெளியாகவில்லை ஆனும் வெளியான முடிவுகளின் பிரகாரம் டி காலின் பிரெஞ்சு மக்கள் கட்சியே முதலாவதாகவும், பிரெஞ்சுக் கமியூனிஸ்ட் கட்சி' இரண்டாவதாகவும் 'வெளிவந்துள்ளன. சோஷயலிஸ்டுகள் 'குடியரசு வாதிகள்' முதலிய இதர கட்சிகள் தமது பழைய ஆதரவை இழந்துவிட்டன.

தேர்தல்கள மிக அமைதியாக வே கழிந்துள்ளன. இரு நகரங்களில் நடடும் கலவரங்கள் ஏற்பட்டன. இவ்விடங்களில் தெரிவுசெய்யப்பட்டசோஷயலிஸ்ட் மேயர்கள் தாக்கப்பட்டனர். இதுதுடன் கமியூனிஸ்ட் ஊர்வலங்களுக்கும், போலிஸ் படையினருக்கும கைகலப்பு ஏற்பட்டது இதன் பயனாக பலர் கைது செய்யப்படடிருக்கிறார்கள்.

வெற்றியீட்டியுள்ள ஜெனரல் டி கால பிரெஞ்சுப் பாலிமெண்ட் சபையைக் கலைத்து விட்டு அதற்கும் பொதுத் தேர்தலை உடனே நடத்தமாறு கோருவார் என்று தெரிகிறது. இப்போது உள்ள அரசியல் சட்டத்தில் சீர்திருத்தம் செய்யும்படியும் அவர் கேட்கலாம் என்றெண்ணப்படுகிறது.

அவரது அறிக்கையில தமது கட்சி முனிசிபல தேர்தலில் இதர கட்சிகளின் மொத்த வோட்டிலும பார்க்க அதிக வோட்டு ஈட்டி இருக்கிறது எனபதை டி கால்வற்புறுத்திக் கூறுவார் என்றும் அறியப்படுகிறது. (ராய்ட்டர்)

"சகோதரச் சண்டை வேண்டாம்"

யூத பயங்கர இயக்கத்தின் கூற்று

ஜெருசலேம், அக். 26

இங்கு யூத பயங்கர இயக்கத்திற்கும் யூதர் தற்காப்புப் படைக்கும் சில கைகலப்புகள் ஏற்பட்டன. இது சம்பந்தமாக பயங்கர இயக்கத்தினர் யூத நிர்வாக ஏஜன்ஸித்தலைவர் டேவிட் பென்கூரியன் ஒரு சகோதரச் சண்டையைக் கிளப்பமுயலவதாக குற்றம் சாட்டியுளளது. 'நாம தற்காப்புப் படையோடு போரிட விரும்பவில்லை ஆனால் பென்கூரியன் தமது கொள்கையை விடாவிட்டால ஒரு சகோதரச் சண்டையே அதன் பயனாக ஏற்படும். தற்காப்பின் நிமித்தமே நாம் சில சூடுகள் சுடவேண்டி ஏற்பட்டது. ஆனால தற்காப்புப் படையின் தாக்குதல்களுக்கு நாம பதிலளிக்கமாவெய்வோம்" எனறு அவர்கள் கூறியுளளனர். (ராய்ட்டர்)

தேவை

20 வருடங்களாகப் பிரசித்திபெற்ற எங்கள் மருந்துகள் மாத்திரைகள் தைலங்களுக்கும் சங்குமார்க் பற்பொடிக்கும் இலங்கையின் ஒவ்வொரு ஊரிலும் ஏஜெண்டுகள் தேவை.

டிப்பாரிட் கட்டக் கூடியவர்கள் மட்டும் எழுதவும்.

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி (S.India)

கிரவுன் தியேட்டர்

ஸகின்னர்ஸ் ரோடு
மருதானை

இன்று காண்பிக்கப்படுவது! புத்தம் புதிய படம்!!

தினசரி மாலை 6-15 இரவு 9-30
சனியும்-ஞாயிறும் மெட்னி 3 மணிக்கு
சுவர்ணலதா-நஸீர் சிறப்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்
சனி-ஞாயிறு மெட்னியில பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்
பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்
முன் இடம் தேடுங்கள்!

சிலான் நியூஸ பேபபர்ஸ லிமிடெடடிறகாக, 1947-ம வருஷம் அக்டோபர் மாதம் 23-ம் தேதி இபபதரிகை 194 வ, தடடாரதெரு, கொழுமபு சுதந்திரன அச்சுக்கந்தோரில அச்சிடு கொழுமபு மெயின் ஸ்டிரீட்டில இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org